# ஹமீத் லண்டனிலிருந்து நாடு திரும்பியபோதும்

அரசு - ஈ. பி. ஆர். எல். எவ். **சந்திப்பில் பங்குபற்றவில்லை!**

(கொழும்பு)

அரசுக்கும்–ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினருக்குமிடையில் நேற்று நடைபெற்ற பேச்சுக்களில் நீதியமைச்சர் ஜனப் ஏ. ஸி எஸ். ஹமீத் கலந்துகொள்ளவில்லை.

சுகவீனம் காரணமாகவே ஜனப் ஹமீத் இப்பேச்சுக்களில் பங்குபற்றவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுக்களில் கலந்து கொள்ளும் விதத்தில் ஜனப் ஹமீத் லண்டனிலிருந்து உடனடியாக நாடு திரும்பியபோதும் இறுதி நேரத்தில் இவரது சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனினும் ஜனப் ஹமீத் இவ்வாரம் விடுதலைப் புலிகளைச் சந்திக்க யாழ்ப்பாணம் வருவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ்.

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி 02 | ஷவ்வால் பிறை: 20 | இதழ்: 93

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 16-05-1990

## சர்வகட்சி மாநாட்டு கூட்டத்தில் ஹமீத் கலந்துகொண்டார்

(கொழும்பு)

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டு தூதுக்குழுவின் கூட்டத்தில் நீதிஅமைச்சரும், வடக்கு கிழக்கு சமாதான சபையின் தலைவருமான ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் கலந்து கொண்டார்.

## நிவாரணம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஆறுமாதத்திற்

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைக்குள்ளே இயங்கி வந்த பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் பொது மக்களின் நன்மை கருதி யாழ். பொலிஸ் நிலையத்திற்குப் பின்னுள்ள கட்டிடமொன்றில் நேற்றுமுன் தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்த அலுவலகம் செயற்பட்டு வருகிறது. (56)

### அரசு — ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சுவார்த்தை

# தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமாக அமையும்!

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(தர்மபுரம்)

**ஈ. பி. ஆர். எல். எவ். விற்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையானது தமிழ் மக்களின் நலன்களுக்காக நடத்தப்படவில்லை.**

**இப்பேச்சுவார்த்தையின் நோக்கங்களும் விளைவுகளும் தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமாக அமையும் என்பதனால் இப் பேச்சுக்களுக்கு எமது ஆட்சேபனையைத் தெரிவிக்கிறோம் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழுவினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சிறிலங்கா அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். விற்குமிடையில் நேற்று கொழும்பில் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் தமிழ்பேசும்மக்கள் மத்தியில் வெறுப்பையும், சந்தேகத்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஹமீத் நாளை மறுதினம் யாழ்- வருகிறார்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் அடுத்த கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்ள நீதியமைச்சர் ஜனப் ஏ. ஸி. எஸ். ஹமீத் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவரது இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென அவதானிகள் கருதுகின்றனர்.

இப்பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் சில முக்கிய கோரிக்கைகள் முன் வைக்கப்படுமென்றும் இது பற்றி ஜனாதிபதியின் அடுத்த நடவடிக்கை என்ன என்

(8-ம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆகஸ்ட் 9-ம் திகதி மூடப்படும்

(கொழும்பு)

ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சை இடம்பெறும் திகதி மாற்றமடைந்துள்ளதனால் இரண்டாம் தவணைக்கென ஜூலை 20ம் திகதி மூடப்படவிருந்த பாடசாலைகள் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி மூடப்படவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய ஒழுங்கின் பிரகாரம், பாடசாலைகளின் 3ம் தவணை ஆகஸ்ட் மாதம் 22ம் திகதிக்குப் பதிலாக செப்டம்பர் மாதம் 5ம் திகதி ஆரம்பமாகும். (அ)

### நயினாதீவு ஆலய உற்சவம்:

# இவ்வருடம் இரவு படகுச் சேவையும் நடைபெற ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

வரலாற்று புகழ்பெற்று விளங்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழா எதிர்வரும் ஜூன்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகிதொடர்ந்து 15 தினங்களுக்கு நடைபெறவிருக்கிறது.

இவ்வருட திருவிழாவை முன்னிட்டு இரவிலும் படகுச் சேவைநடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(8 ம்பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நேற்று போதியளவு எரிபொருள்!

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணம் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் குதச்சாலைக்கு, 52,740 லீற்றர் பெற்றோலும், 26,370 லீற்றர் டீசலும். 26.370 லீற்றர் மண்ணெண்ணையும் நாலு வகன்களில் ரயில் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் 1,17,170 லீற்றர் பெற்றோலும், 1,62,570 லீற்றர் டீசலும், 1 39,445 லீற்றர் மண்ணெண்ணையும் ரயில் மூலம் கொண்டுவரப்பட்டன.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகர சபை எல்லைக்குள் ஐந்து எரிபொருள் நிரப்பு நிலை

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். காணிப் பதிவகத்தில் கடந்த பெப்ரவரி முதல் 10 ஆயிரம் உறுதிகள் பதியப்பட்டுள்ளன!

(யாழ்ப்பாணம்)

யாழ். காணிப் பதிவகத்தில் இந்த வருடம் பெப்ரவரிமாதம் முதலாம் திகதியிலிருந்து நேற்று வரை 10ஆயிரம் உறுதிகள் பதியப்பட்டுள்ளன. இந்த 10 ஆயிரம் உறுதிகளும், 1987 செப்டம்பர் மாதம் தொடங்கி 1988 டிசம்பர் 31 வரை எழுதப்பட்ட உறுதிகள் ஆகும்.

இதேவேளையில் காணிப்பதி

(8-ம் பக்கம் பார்க்க)

## கைதடி, நாவற்குழி அபிவிருத்தி முயற்சிகளுக்கு 9 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி பகுதிகளிலுள்ள வீதிகள், கட்டடங்கள் புனரமைப்பிற்காக ஒன்பது கோடி 20 லட்சம் ரூபா உள்ளூராட்சி சபையினால்ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

கைதடி, நாவற்குழி பகுதிகளிலுள்ள பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடன் நடத்

(8-ம் பக்கம் பார்க்க)

## திக்கம் பனஞ்சாராயம் விரைவில் விற்பனைக்குவரும்

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பனஞ்சாராயம் வெகுவிரைவில் விற்பனைக்காகச் சந்தைக்கு வரவிருக்கின்றது.

1987–மே மாதம் 26–ம் திகதி வடமராட்சியில் நடைபெற்ற 'லிபரேசன் ஒப்பரேசன்' நடவடிக்கையின் போது ஏறக்குறைய 80 லட்சம் ரூபா

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 250, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3858]

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### சேவை

வீட்டுப்பாவனைப் பொருட்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். மகாலக்ஷ்மி தளபாட நிலையம் 206, முதலாங் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரிச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-3859)

### தேவை

ஸ்தாபனம் ஒன்றில் விற்பனையாளராக பணிபுரிவதற்கு G. C. E (O/L) அல்லது A/L படித்தபெண்கள் தேவை. தொடர்புகொள்ளவும். மகாலட்சுமி தளபாட நிலையம், 206, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-3860)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 22-05-90 செவ். மு. ப. 8-00 / 10-30 / பி. ப. 1-30 ஆகிய நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புலமைப் பரிசில் பரீட்சை வினா விடை விற்பனைக்குண்டு. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரிமுன்பாக, யாழ்ப்பாணம். (சி-3853)

### தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த சி. பா. மகேந்திரனுக்கு சொந்தமான தேசிய புகையிரதசேவை அடையாள அட்டை, புகையிரத போக்குவரத்து சேவை பாஸ் (Duty Pass) என்பன உட்பட Purse உடன் கடந்த 6ம் திகதி யாழ்/மீசாலைக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Maxaal House, 20, Jubilee Bazar, Jaffna என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி-3856)




இன்றைய
№ 1
நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
LANKA
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி


# நியமனம் பெற்று மூன்று மாதமாகியும் வேதனம் வழங்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் நியமனம்பெற்ற ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கான வேதனம் இன்னும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 15-ம் திகதி வழங்கப்பட்ட இந்நியமனங்கள் இம்மாதத்துடன் மூன்று மாதமாகிவிட்ட போதிலும், நியமனம் வழங்கப்பட்டவர்களுக்குவேதனம் வழங்கப்படாத அசமந்தப் போக்குக் குறித்து நியமனம் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

போதுமானநிதி இவர்களுக்கு இன்னும் கல்வியமைச்சினால் வழங்கப்படாததே காரணம் என்று கூறப்படுகின்றது.

நியமனம் பெற்றவர்களில் பலர் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, பல ஆண்டுகாலமாக தொண்டராசிரியர்களாக கடமை புரிந்த பலர் இன்னும் நியமனம் பெறவில்லை. அவர்களை நியமிப்பதாக உயரதிகாரிகள் உறுதி கூறியபோதும் அவர்கள் நிலை 'இலவுகாத்த கிளி' கதையாக இருக்கிறது.

# தடை முகாம்களில் புலிகள் சோதனை

(வவுனியா)

வவுனியா - யாழ்ப்பாணம் வீதி, வவுனியா-மன்னார் வீதி ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளால் அமைகக்கப்பட்ட தடைமுகாம்கள் செயற்பட்டு வருகின்றன.

இத்தடை முகாம்கள் ஊடாகச் செல்லும் சந்தேகத்திற்குரிய வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## திருவாசக சுவாமிகள் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நினைவு விழா எதிர்வரும் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில், சந்நிதியானின் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

திருவாசக சுவாமிகள் தொண்டர் சபையினரும் சன்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகளும் இணைந்து நடத்தும் இந்நினைவு விழா, இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம் தலைமையில் நடைபெறும். சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு. செ. மோகனதாஸ், திருவாசகசுவாமிகள்படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக, இந்து நாகரிகத்துறைத் தலைவர்கள் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், திவ்யஜீவன், சங்கத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

விழா இறுதியில் அன்னதானம் வழங்கப்படும்.

# தாதிகள் பற்றுக்குறை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள தாதிகள் பற்ருக் குறையை நீக்குவதற்காக வென போதனாவைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி, கிளிநொச்சி, பருத்தித்துறை, தெல்லிப்பளை ஆகிய இடங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளிலேயே தாதிகள் பற்ருக்குறை காணப்படுகிறது. இப்பற்ருகுறையைப் போக்குமுகமாகவே யாழ். போதனாவைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினர் 8ம் வகுப்பிற்குமேல் படித்த ஆண் பெண் இருபாலாருக்கும் விசேடதாதிப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக நலன்புரிச் சங்க உத்தியோகத்தர் ஒருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.


## செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய திருவிழா நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| வைகாசி 17. | கொடியேற்றம் மாலை 6-00மணி செபமாலை, திருப்பலி, மறையுரை. |
| வைகாசி 18-24 | தினமும் மாலை 6-00 மணிக்கு செபமாலையும், மறையுரையும், திருப்பலியும். |
| வைகாசி 25. | நற்கருணை நாள். |
| வைகாசி 26. | காலை 7-00 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சுரூப பவனியும் இடம்பெறும். |

குறிப்பு: யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(எ-748) — பங்குத்தந்தை


# வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள சாரதிகள் சங்கம்

(பண்டத்தரிப்பு)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதார திணைக்கள சாரதிகளின் நலன்கருதி சங்கத்தின்பெயரை 'வடக்கு-கிழக்கு மாகாணசுகாதார திணைக்கள சாரதிகள் சங்கம்' என்று பெயர்மாற்றம் செய்வதென்ற தீர்மானம் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண சுகாதார திணைக்கள சாரதிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. செ. உருத்திரா தலைமையில் யாழ் நகரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசினர் வைத்தியசாலைகளில் 'அம்புலன்ஸ்' சாரதிகளுக்கு விடுதிவசதி ஏற்படுத்திக் கொடுப்பதுடன் கடமை அறையும் ஏற்படுத்தி கொடுக்கப்படவேண்டும் என்றும், அம்புலன்ஸ் வண்டிகளுக்கு நிரந்தரமாக உதவியாளர் ஒருவரை நியமித்துத் தரவேண்டும்என்றும் அம்புலன்ஸ் வண்டி சாரதிகள் லீவு எடுத்துச் செல்லும்போது பதில் கடமையாளரை பதில் கடமை செய்வதற்கு நியமிக்க வேண்டும் என்றும் வேலை கொள்ளுவோரை கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

சாரதிகள் தொடர்பான சுற்று நிருபங்களை சங்கம் வேலை கொள்ளுவோரிடமிருந்து பெற்றுக்கொள்வது என்றும், சங்கத்தில் உறுப்பினராகவுள்ள சாரதி ஒருவர் மரணமடைய நேரிட்டால் சங்கம் 4000 ரூபா வழங்க வேண்டும் என்றும் இதற்கான நிதியை உறுப்பினர்களிடமிருந்து 100 ரூபா வீதம் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (72)


## கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான உருக்குத் தளபாடங்கள் வழங்குதல்

யாழ். பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான கீழ்க்காணப்படு உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள், உருக்குத் தளபாட உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்களிடம் இருந்து 04-06-90-ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. இத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் (இணைப் பிரதிகளில்) இத் திணைக்களத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல்வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் ''பாடசாலைத் தளபாடங்கட்கான கேள்விகள்'' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

3. கேள்விப் படிவங்கள் நிபந்தனைகள், மாதிரி படங்கள். விபரக்கூற்றுக்கள் ஆகியவைகளை, மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 50/-ஐ காசாகவும், மீளளிக்கப்படத்தக்க வைப்புப்பணமாக ரூபா 250/-ஐ யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப்பணிப்பாளரின் பெயரில் யாழ். இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாகவும் 25-5-90ம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினைச் (பொது 172) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம்:

04.

(அ) மாணவர் உருக்குக் கதிரைகள்
(ஆ) மாணவர் உருக்கு மேசைகள்
(இ) பாலர் உருக்குக் கதிரைகள்
(ஈ) பாலர் உருக்கு மேசைகள்

இ. சுந்தரலிங்கம்,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1990-05-07. (ஏ-749)


# இயந்திரம் மூலம் தச்சு தொழிற்பயிற்சி

(மானிப்பாய்)

உலக தரிசனத்தின் உதவியுடன்ஆனைக்கோட்டைமுள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இயந்திர மூலதச்சுத் தொழிற் பயிற்சி நெறி ஆரம்பித்து வைகைப் பட்டுள்ளது.

யாழ். மெதடிஸ்த திருச்சபையும், முள்ளி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து மேற்படி பயிற்சி நெறியை நடாத்துகின்றன.

சங்கத் தலைவர் திரு. கே. சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு ஆணையாளர் திரு.எஸ். ஐ. நித்தியராஜ் கலந்து கொண்டார். உலக தரிசனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. பென். குணரத்தினம் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

பிரதம விருந்தினர் திரு. நித்தியராஜ் தமது உரையில்,

(7-ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவு தேடி

# பெனுஷிர் பூட்டோ இன்று பயணம்

(இஸ்லாமாபாத்)

**காஷ்மீர் விவகாரத்தில் முஸ்லிம் நாடுகளின் முழு ஆதரவையும் தேட பாகிஸ்தான் பிரதமர் பெனுஷிர் பூட்டோ இன்று வெளிநாட்டு பயணமொன்றை ஆரம்பிக்கிறார். இந்தப் பயணம் முஸ்லிம் நாடுகளிடையே இந்தியாவிற்கு எதிரான ஓர் உணர்வலையை ஏற்படுத்துமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

காஷ்மீர்விவகாரம் தொடர்பாக இந்தியா விட்டுகொடுக்காத கண்டிப்பான நிலை ஒன்றைக் கடைப்பிடித்து வருவதும் இவ்விவகாரத்தில் அமெரிக்கா இந்தியாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதும் பாகிஸ்தானுக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து முஸ்லிம் நாடுகளிடையே அதிகளவு ஆதரவைப் பெறும்நோக்கில் திருமதி பெனுஷிர் பூட்டோ தனது இருவார சுற்றுப் பயணத்தை இன்று ஆரம்பிக்கிறார்.

முதலில் ஈரான் செல்லும் பிரதமர் அங்கிருந்து துருக்கி, சிரியா, ஜோர்தான், வடயேமன், எகிப்து, லிபியா, டுனீசியா செல்வார். இந்நாட்டு தலைவர்களுடன் திருமதி பெனுஷிர் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக விபரமாக ஆராய்வார்.

இது குறித்து அந்தந்த நாடுகளின் முழு ஆதரவையும் பிரதமர் கோருவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐ. நா. சபையின் கூற்றுப்படி இந்த சர்ச்சையை காஷ்மீர் மக்களே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்க்க வேண்டுமென்ற முடிவையும் ஆதரிக்குமாறு இவர் இங்கு வலியுறுத்துவார்.

இதேவேளை பாகிஸ்தான் பிரதமரின் இந்த விஜயம் குறித்து இந்தியா கருத்தெதனையும் வெளியிடாத போதிலும் இதனை முற்றாகவே எதிர்ப்பதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## "ஒற்றுமை அவசியம்"

(யாழ்ப்பாணம்)

"இன்றைய சூழ்நிலையில் மனிதனிடம் அன்பு, சமாதானம், ஒற்றுமை நிலவ வேண்டும். நாம் எல்லோரும் ஒன்றுபட்டு எமது சமுதாயத்துக்கு நல்வாழ்வு கிடைக்கப் பாடுபடவேண்டும்."

இவ்வாறு பாஷையூர் உதவிப் பங்குத் தந்தை அருட்திரு பிரான்சிஸ் அடிகளார்கொழும்புத்துறை வசந்தபுரம், மணிப்புரி, அரியாலை, உதயபுரம். எழிநூர் கிராம மக்களின் ஒன்றிணைந்த கூட்டு வழிபாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அருட்திரு ஜெபநேசன் அடிகள் மறைவாழ்வில் பொதுநிலையினரின் பங்கு என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார், புலவர் அரியநாயகம் கிறிஸ்துவின் உத்தானத்தைக் கவிதையாகப் பாடினார். (54)

# கராச்சியில் வேலைநிறுத்தம் நகர்தொடர்ந்து ஸ்தம்பிதம்

## இராணுவத்தை எதிர்க்க மக்கள் தயார்

(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் தொடர்ந்து மூன்றாவது நாளாக வேலைநிறுத்தும் தொடர்கிறது. கடந்த இரு தினங்களும் இந்த வேலைநிறுத்தத்தால் கராச்சி நகர் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

நிலைமை மோசமடைந்ததை தடுக்கும் பொருட்டு நகரெங்கும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதுடன் கவசவாகனரோந்தும் பெருமளவில் நடைபெற்று வருகிறது. அரசின் நடவடிக்கைகளை கண்டித்தே இந்த வேலைநிறுத்தம் தொடர்கிறது.

எதிர்கட்சி முக்கிய ஆதரவாளர்கள் பலர் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதும் பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதையும் கண்டித்தே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. கடைகள் சந்தைகள், அரச அலுவலகங்கள் முற்றாக செயலிழந்துள்ளன.

இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 10 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் வேலைநிறுத்தத்தை முறியடிக்க இராணுவம் பலத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இராணுவத்தை எதிர்க்கவும் தயாராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட லட்சக்கணக்கான மக்கள் தயாராகி வருவதாகவும் கூறப்படுகிறது. (சி)

# சீனவில் ஒருவருடத்தில் 70 விமான விபத்துக்கள்! 2000 பேர் வரை பலி!

(பீக்கிங்)

சீனவில் கடந்த வருடம் நாடுதழுவிய ரீதியில் இடம் பெற்ற 70 விமான விபத்துக்களில் 2,000-ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் ஆயிரக் கணக்கானோர் காயமடைந்துள்ளதாக சீனவின் உத்தியோகபூர்வ பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

சீன வரலாற்றில் கடந்த வருடமே ஆகக் கூடுதலான விமான விபத்துக்கள் இடம் பெற்றதுடன் உயிரிழப்புகளும் அதிகமாயுள்ளது. இதுகுறித்து பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும் பெரும்பாலான விபத்துக்கள் விமானிகளின் தவறினாலும், எஞ்சின் கோளாறுகளினாலுமே இடம் பெற்றுள்ளது.

சீனவில் பாவனையிலுள்ள அதிகளவு விமானங்கள் சோவியத் தயாரிப்பு விமானங்களாகும். மேற்படி விபத்துகளையடுத்து பல சீன விமானங்கள் தற்போது மீள் பரிசோதனைக்காக சோவியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விமான விபத்துக்களில் சீனரைத் தவிர வெளிநாட்டவர்கள் பலரும் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பல ராணுவப் போர் விமான விபத்துக்களிலும் பல வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான விபத்துக்கள் பற்றியும் அதனால் ஏற்பட்ட சகல சேதங்கள் குறித்தும் சீன கடந்த பல வருடங்களில் இம்முறைதான் உத்தியோக பூர்வமான விபரங்களை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளில் 6-ம் ஆண்டு

# வகுப்பு ஆரம்பம்!

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியின் முன்னணி கல்லூரிகளான பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியிலும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியிலும் கடந்த வாரம் முதல் 6-ம் ஆண்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் உத்தரவின் பேரில் யாழ். கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம கல்லூரி அதிபர்களுக்குப் பணிப்புரை வழங்கியதையடுத்தே இவ்விருகல்லூரிகளுக்கும் 6-ம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்கான பிரவேசப்பரீட்சை கொத்தணி, கோட்டவேறுபாடுஎன்ற நிபந்தனையுமின்றி திறந்த பரீட்சையாகநடாத்தப்பட்டது.

பல்வேறு பகுதிகளிலும் இருந்து 5-ம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினர். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தவிர்ந்த ஏனையமாணவர்கள் இப்போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விருகல்லூரிகளிலும் 6 ம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதில் பெற்றோர்களுக்கும் யாழ். கல்வித்திணைக்களத்திற்கும் இருந்து வந்த இழுபறியினால் இவ்விருகல்லூரிகளிலும் 6-ம் ஆண்டை ஆரம்பிக்க முடியாமல் கல்லூரி நிர்வாகங்கள் திண்டாடிக் கொண்டிருந்தன. யாழ் கல்வித்திணைக்களமும் விடாப்பிடியாக 6-ம்ஆண்டு அனுமதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

பாதிப்படைந்த வடமராட்சிப்பகுதி மாணவர்களும் பெற்றோர்களும் இதுசம்பந்தமாக கல்வியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். மாணவர்கள் பெற்றோர்களின் இந்நீதியான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என கல்வி அமைச்சு சகல அதிகாரிகளுக்கும் கடும் உத்தரவு பிறப்பித்திருந்தது. மாணவர்கள் பெற்றோர்களின்

(5-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

16 - 05 - 1990

புதன்கிழமை

மேடம்: குடும்பச் செலவு, சோம்பல், நற்சிந்தனை, இனசன வரவு.

இடபம்: சுபகாரியப் பேச்சு, அன்னிய உதவிகள், உழைப்பு, அலைச்சல்.

மிதுனம்: பண வரவு, கௌரவம், வீண் யோசனை, அயலவருடன் மனக்கருத்து.

கடகம்: நண்பர் விரோதம், மறதி, கடின வாக்கு, உழைப்பு

சிங்கம்: இனசன வரவு, சுபச்செய்தி, செலவு, அலைச்சல்.

கன்னி: வைராக்கியம், கடித வரவு, மனக்குழப்பம், ஆலயச் செலவு.

துலாம்: உறவினர் உதவி, பொருள் வரவு, சுபச்செய்தி, கிலேசம்.

விருச்சிகம்: உடல் உபாதை, பிடிவாதம், மதிப்புக் குறைவு, நீசரால் தொல்லை.

தனுசு: வீண் தொல்லை, அலைச்சல், இடமாற்றம், நற்சிந்தனை.

மகரம்: சாஸ்திர ஆராச்சி, காரிய தாமதம், அலைச்சல், செலவுகள்.

கும்பம்: கற்பனை, சுபசெய்திகள், செல்வாக்கு, பண வரவு.

மீனம்: வீண்பழி, எதிர்ப்புகள், உழைப்பு, சஞ்சலம்.

இ. மகாதேவா

# ராணுவ நடவடிக்கையெனில் உறவுகள் துண்டிக்கப்படும்!

## ரஷ்யாவுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

(லண்டன்)

சோவியத் அரசு சர்ச்சைக்குரிய குடியரசுகள் மீது இராணுவ நடவடிக்கையை எடுக்கும் பட்சத்தில் அதனுடனான உறவுகள் குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டியநிலை ஏற்படுமென பிரிட்டன் எச்சரித்துள்ளது.

சோவியத்தில் சுதந்திரகுடியரசுகளான லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியாவின் குடியரசுப் பிரகடனம் நியாயமானது. இதனை நசுக்க சோவியத் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அதனுடனான உறவுகளை துண்டிக்க வேண்டியதோர் நிலையும் பிரிட்டனுக்கு ஏற்படும்.

இவ்வாறு பிரிட்டன் வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. டக்கிளஸ் ஹேர்ட் எச்சரித்துள்ளார் லண்டனில் வெளிநாடு பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் திரு. ஹேர்ட் இந்த எச்சரிகையை விடுத்தார்.

இது தொடர்பாக பிரிட்டன், சோவியத்துடன் பேச்சுக்கள் நடாத்த விரும்புவதாகவும். இதன் மூலம் இப்பிரச்சனைக்கு நிரந்தமான தீர்வொன்றைக் காணலாமெனத்தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# சூறுவளியில் சிக்கிய

## ஆயிரக்கணக்கானோரை காணவில்லை

### தேடுதல் நடவடிக்கை தொடர்கிறது

(புதுடில்லி)

இந்தியாவின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட கடும் சூறுவளியில் சிக்கி காணமல் போன ஆயிரக்கணக்கான உறவினர்களையும். நண்பர்களையும் உயிர் தப்பிய பலர் தேடி வருகிறார்கள். குறிப்பாக ஆந்திராவிலேயே பலர் காணமல் போயுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த வாரம் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட பலத்த காற்றழுத்த மண்டலம் தென்னிந்தியாவை மிகக் கடுமையாக தாக்கி பலத்த சேதம் விளைவித்தது. இதில் சுமார் 350 பேர் கொல்லப்பட்டனர், பலர் காணமல் போயுள்ளனர்.

இந்த சூறுவளியில் உயிர் தப்பி அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்த பலர் தற்போது காணமல் போயுள்ள ஆயிரக்கணக்கான நண்பர்களையும், உறவினர்களையும் தேடிவருகின்றனர். காணமல் போன பலர் சூறுவெளில் சிக்கி இறந்து போயிருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத்தேடும் பணியில் முப்படைகளும் பொதுமக்களுக்கு உதவிவருகின்றன. வீடுகளையிழந்த பல லட்சம் மக்கள் தற்போது அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## புகைக்கூடு ஏவப்படவில்லை

(வடமராட்சி)

வல்வை முத்துமாரியம்மன் தீர்த்த உற்சவ இந்திர விழாவில் வல்வை நெடியகாட்டு வாலிபர்களால் உலக சாதனை

(5–ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உயர்ந்த எண்ணங்களைவிட ஆத்மா உயர்வானது.

— ஆன்றோர் வாக்கு.

## நமது நோக்கு

# கல்வி வாய்ப்புகள் - கைநழுவிப் போகலாமா?

உயர்கல்வியைக் குறிக்கோளாக வைத்துப் படித்த மாணக்கர்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததினால் தவிக்கிறார்கள்.

தற்போது இவர்களுக்கு இடைமட்ட கல்விப் போதனைக்காக பிராந்தியக் கல்லூரிகள் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

இதைவிட, திறந்த பல்கலைக்கழகத்திற் பல பாடநெறிகள் ஒழுங்குசெய்யப்பட்டுப் போதனைகள் நடைபெற்றுவருகின்றன.

இலங்கை முழுவதிலும் 1980ல் 4000 மாணக்கருக்கான பாடநெறிகள் சிலவற்றோடு ஆரம்பித்த திறந்த பல்கலைக்கழகம் இன்றோ 30,000 மாணக்கரைக் கொண்டதாக வளர்ச்சிபெற்றுள்ளது.

இத்தகைய கல்விப் போதனை முறை எமது நாட்டில் மாத்திரம் ஏற்படுத்தப்பட்ட புதிய முறையல்ல.

சீனா, ஜப்பான், கொரியா, பிரித்தானியா போன்ற பல நாடுகளிலும் இத்தகைய கல்விவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அச்சடித்த குறிப்புகள், கட்புலச் செவிப்புலச் சாதனங்கள், செய்முறைப் பயிற்சிகள், வழிகாட்டல் முறைகள், தொடர் மதிப்பீடுகள் போன்ற பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன.

இதிற் சேர்வதற்கான அனுமதி விதிகள் 'இறுக்கமானதாக' இல்லை: க. பொ. த. (உ/த) பரீட்சையிற் சித்தியடையாதவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

இதனால் இதன் பாடநெறிகளின் தராதரம் பற்றி வீணான சந்தேகங்கள் ஏற்படுவது இயற்கையே.

ஆனால், இந்த திறந்த பல்கலைக்கழகம் மேலும் புதிய பாடநெறிகளை ஆரம்பித்தும், வசதிகளைப் பெருக்கியும் வருகின்றது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் நூல்நிலையங்கள், ஆய்வுகூடங்கள் போன்ற வளங்களைப் பயன்படுத்துவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

எனவேதான் அவற்றிற்கு அருகாமையில் பிரதேச நிலையங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது, விஞ்ஞானமாணி, தொழில்நுட்பவியல் டிப்புளோமா, சிறு வாணிப முகாமைத்துவம் போன்ற புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இயந்திரவியல் டிப்ளோமா, முகாமைத்துவ டிப்ளோமா போன்றவை ஜூன் மாதத்தில் ஆரம்பிக்க இருப்பதாகவும் தகவல் வந்துள்ளது.

இந்த நிலையில் இப் பல்கலைக்கழக உபவேந்தர் அண்மையில் ஒரு திடுக்கிடும் தகவலைத் தந்துள்ளார். யாழ்ப்பாணப் பகுதி மாணக்கர் இந்த திறந்த பல்கலைக்கழகப் பாடநெறிகளிற் சேர்வதில் ஆர்வம் காட்டுவதில்லை; மொத்தமுள்ள மாணக்கரில் இரண்டு சத வீதத்தினரே இப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பட்டப் படிப்புக்கு அனுமதி கிடைக்கவில்லை என ஏங்கியிருப்போர் இத்தகைய கல்வி வாய்ப்புகளை நழுவ விடலாமா?

இங்குள்ளவர்கள் இப் பாடநெறிகளுக்கு ஆர்வம் காட்டாவிடில். இங்குள்ள வளங்களை வேறு பிரதேச நிலையங்களுக்கும் கொண்டுபோகும் நிலையும் ஏற்படலாம்.

கிடைக்கும் கல்வி வாய்ப்புகள் கைநழுவிப் போகாதிருக்க, ஆசிரியர்கள் மாணக்கருக்கு வேண்டிய தகவல்களைத் தந்து, வழிகாட்டவேண்டும்!

### உலகத் தமிழ் மாநாடுகள்

# உண்மைத் தமிழர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்?

**குரும்பசிட்டி உலகத் தமிழர் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கும் உலகத் தமிழர் விழாவின் ஒரு அம்சமாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற மொறிசியஸ் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் வீடியோ கண்காட்சி இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும். அதனையொட்டி இந்த விமர்சனக் கட்டுரையை வெளியிடுகிறோம்.**

உலகில் இன்று பேச்சு வழக்கு ஒழிந்துபோன உயர் தனிச் செம்மொழிகள் பல. அம்மொழிகளிலும் தொன்மையான உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் ஒன்று மட்டும்தான் இன்றைக்கும் உலகத்தில் பேச்சுவழக்கில் உள்ள ஒரே மொழியாகும்.

எனவே தமிழுக்கும் உலகின் ஏனைய உயர்தனிச் செம்மொழிகளுக்கு நேர்ந்த பேச்சுவழக்கு அற்றுப்போகும் அபாயம் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக ஈழம் தந்த வேழமாகிய தனிநாயக அடிகளார் உலகு தழுவிய மாநாடுகளைக் காணும் ஒரு பெரும் வரலாற்றைத் தொடங்கிவைத்தார்.

தாம் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த மலாயாப் பல்கலைக்கழகத்தின துணைகொண்டு 1966 ஏப்ரலில் 16-23 திகதிகளில் அந்நாட்டின் தலைநகராகிய கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கோலாகலமாக நடக்கச் செய்தார்.

இரண்டாம் மாநாடு (1968 ஜனவரி 4-10) தமிழ்நாட்டின் தலைநகாம் சென்னையிலும் மூன்றாம் மாநாடு (1970 ஜூலை 15-18) பிரெஞ்சுநாட்டுத் தலைநகராம் பாரிசிலும், நான்காம் மாநாடு (1974 ஜனவரி 3-9) ஈழநாட்டைச்சேர்ந்த யாழ்ப்பாணத்திலும், ஐந்தாம் மாநாடு (1981 ஜனவரி 4-10) மீண்டும் தமிழகத்தில் தென்னந்தமிழ் வளர்த்த தண்பாண்டித் தலைநகராம் ஈடுஇணையில்லாத கூடல் மதுரையிலும், ஆறாம் மாநாடு (1987 நவம்பர் 15-19) திரும்பவும் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலும் சிறப்பாக நடைபெற்றன.

## வருமுன் காக்கும் முயற்சி

தனிநாயக அடிகளாரின் வருமுன் காக்கும் பெருமுயற்சி எத்தனை திருவுடைய தென்பதை ஏழாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற மொரிசியசே மெய்ப்பித்தது.

ஆம், மொரிசியசு நாட்டில் தமிழர்கள் உள்ளனர். எனினும் தமிழ் பேச்சுவழக்கில் அவ்வளவாக இல்லை. அங்கே வாழும் தமிழர்கள் பெயராலும், உணர்வாலும் தமிழ் நாட்டுத் தமிழர்களைப் போலவே இருந்தாலும் அவர்கள் பேசுவது கிரியோல் மொழி. எழுதப் படிக்கப் பயன்படுத்துவது பிரெஞ்சு மொழி. அரசாங்கத்தில் கையாள்வது ஆங்கிலமொழி.

ஆனால், வெறும் மாநாடுகளை மட்டும் நடத்தி, பன்னாட்டுத் தமிழர்களும், தமிழ் ஆய்வாளர்களும் ஓரிடத்தில் ஒருங்கு கூடித் திருவிழாக் காண்பதன் மூலமே தமிழ் செழித்துவிடும், பிழைத்துவிடும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் தர முடியாது.

## ஆய்வுமுடிவுகள் என்ன ஆயிற்று

தமிழை வளர்ப்பதற்கும், வாழ்விப்பதற்கும் இது போன்ற மாநாடுகளில் பல ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உண்மைதான்.

ஆனால், அங்கே மேற்கொள்ளப்படும் ஆய்வு முடிவுகளை நடைமுறைப்படுத்துவது யார்? எங்கே? எப்படி?

இதற்கு முன்பு நடந்த உலகத் தமிழ் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமுடிவுகள் என்னவாயின? அவற்றின் நிறைவேற்றம் எந்த நிலையில்? இவற்றுக்கு விடைசொல்வது யார்?

தமிழ்மொழிக்கென்று ஒரு தனிநாடு - ஆட்சிப்புலம் உருவாகின்றவரை நிறைவேற்றத்திற்கு உத்தரவாதம் இல்லை யாரும் இதற்கு விடைசொல்லவும் முடியாது.

பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும் கூட சில நாடுகளிலேனும் தமிழ்மொழி அரசு அங்கீகாரம் பெற்றிருந்தாலும் கூட எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று ஒரு நாடேனும் வழிகாட்டாமல் ஏனைய நாடுகளால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கடல்கடந்த தமிழர்களால் அதைக் கடைப்பிடிக்கவும் முடியாது.

அதேவேளையில் ஒருமொழிக்குரிய மக்களைக் கட்டியெழுப்பினால், அம்மொழி செத்த நிலையில் இருப்பினும் அதை மீண்டும் வளர்ப்பிக்கச் செய்துவிட முடியும் என்பது ஈபுருமொழி மக்கள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உலகம் முழுவதும் சிதறிக் கிடந்த யூதர்களை ஒன்றுபடுத்தியதன் மூலமும், உலகரீதியில் அவர்களுடைய பொருளியல் பலத்தை ஒன்றுதிரட்டியதன் மூலமும் அவர்களுக்கென ஒரு தனிநாட்டை உருவாக்கியதன் மூலமும் அது சாதிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழரல்லாத தமிழறிஞர்கள்

தமிழை ஒரு மொழி என்ற அளவில் அதன் ஆய்வில் பங்கேற்க வந்திருக்கும் தமிழரல்லாத தமிழறிஞர்களை இதற்காக நாம் குறைசொல்லமுடியாது. சொல்லவும் கூடாது.

அதேநேரம் தமிழர்களாகவும் உள்ள தமிழறிஞர்கள் வெவ்வேறு பஜனைகளில் கலந்து கொள்வதைப்போல இதையும் ஒரு பஜனையாகவே கொண்டு, ஆய்வு என்ற பெயரில் கதாகாலட்சேபம் செய்து விட்டுப் போகலாம் என்று கருதுவார்களேயானால், இந்தச் செக்கு மாட்டு நிலை தமிழுக்கு எந்த நலனையும் தேடித் தராது என்பதை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறோம்

## மொறிசியஸ் மாநாடு

மொரிசியசு ஏழாம் உலகத் தமிழ் மாநாட்டை அதன் கல்வியமைச்சர் மாண்புமிகு ஆறுமுகம் பரசுராமன் மிகுந்த சிரமங்களுக்கிடையே முன்னின்று சிறப்புற நடத்தினார்.

அந்நாட்டுத் தலைமை ஆளுநர் மேதகு வீராசாமி ரிங்காடு, தலைமையமைச்சர் மாண்புமிகு அனிருத் ஜகந்நாத் மற்றும் அமைச்சர்களும் அந்நாட்டு அரசியல் தலைவர்களும், மாநாட்டில் கலந்துகொண்டார்களேனும் மொரிசியசு அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பு இருந்தது என்று சொல்லமுடியாது.

ஏனெனில் 10 இலட்சம் மக்கள் தொகையுள்ள மொரிசியசில் தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 1½இலட்சமே. தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவிலேயே, அந்நாட்டில் அடுத்தடுத்து நடக்கவுள்ள உலகத் தெலுங்கு மாநாடு, உலக இந்தி மாநாடு, உலக மராத்தி மாநாடு, உலக உருது மாநாடு ஆகியவை பற்றிய அறிவிப்புகளை முதலில் சொல்லிவிட்டுத்தான் மாண்புமிகு பரசுராமனால் தமிழ் மாநாடு பற்றிப்

(6ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### அருகேயிருந்தால் ஆபத்தா?

இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா அண்மையில் பத்திரிகையாளரைச் சந்தித்திருக்கிறார்.

அருகில் இருப்பதால் ஆபத்துத்தரும் ஐந்து விடயங்களை அவர் விபரித்திருந்தார்.

அவை... எவை? தீ, கடல், யானை, மன்னன், பெரிய அயலார் ஆகியவையால் எப்போதும் ஆபத்தே!

தீ பரவினால் ஆளையே அழித்துவிடும் கடல்பொங்கினால் கரையில் இருப்பவர்களை அடித்துக் கொண்டு போய்விடும்: யானை மறக்காது பாகனையே கொன்றுவிடும் பெரிய அயலவர்களும் மன்னனும் இவ்வாறே!

இவற்றில் இரண்டினைப் பற்றி வள்ளுவர் கூறியது என்ன?

''அகலாது அணுகாது
தீக்காய்வார் போல்க
இகலாது வேந்தொழுகு
வார்!''

தீயருகே இருந்து குளிர்காய்பவர்கள். ஆக நெருங்கிப் போனாலும் கருகிவிடுவார்கள்: தூரச்சென்றாலோ தீயின் வெப்பம் கிடைக்காது.

அதுபோலத்தான் மன்னரோடு பழகுவோரும் அதிகம் நெருக்கமாகவும் போகக்கூடாது! தூர விலகியும் போகக்கூடாது.

இராஜாங்க அமைச்சர் எதை நினைத்துச் சொன்னாரோ எமக்குத் தெரியாது.

ஆனால்... வள்ளுவர் வகுத்த வழியைப் பின்பற்றினால் பலருக்குப் பல தொல்லைகள் இருக்காது...!

வாணி

### முச்சந்தியில் மூன்று பேர்

# கலப்படம் கலப்படம்

## எங்கும் எதிலும் கலப்படம்

## பொருள்களைப் பார்த்தாலே புலப்படும்

இன்று மக்கள் 'கலப்பட' உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் 'கலப்பட' வாழ்க்கையால் எங்களுக்கு ஆண்டவனால் நிர்ணயித்த வாழ்க்கையிலும் பார்க்க இந்த புதிய யமகிங்காரர்களால் எமது வாழ்க்கை மீளாய்வு செய்யப்படுகின்றது. நாள் ஒரு பொழுதும் பொழுதொரு வண்ணமுமாக நாம் செத்துக் கொண்டிருக்கிறோம். இதுபற்றி இந்த மூவர் அபிப்பிராயம் சொல்கிறார்கள். இவர் ஒரு பொது மகன். சரவணையைப்பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் சொல்வதைக் கேளுங்கள்.

### சோற்றில் பாக்கு

''தமிழ் மக்கள் காசைச் சேகரிக்க வேண்டுமென்பதில் அக்கறையுள்ளவர்கள். அதற்காக எதுவும் செய்யக் கூடியவர்கள்; என்று எமக்கு பொதுவாக ஒரு நாமம் சூட்டப்பட்டிருக்கிறது: எம்மவர்களால் தரங்கெட்ட தொழில் என்று ஒதுக்கப்பட்ட தொழில்கள்கூட 'வெளிநாடு' என்ற போர்வையில் காசுக்காக செய்கிறார்கள் என்று காதால் கேட்பதை, எமதுதமிழர்களின் கலாச்சாரம் எந்தளவு சீரழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து வேதனை அடைய வேண்டி இருக்கிறது.

அதுபோன்று தான் இந்த கலப்பட வாழ்க்கை. ஒருகாலத்தில் சோற்றுக்கு 'பாக்குப்' போட்டு அவித்து காசுக்காக அரைவயிற்றுப் பட்டினியோடு எத்தனைபேரை அனுப்பினார்கள் எமது ஹோட்டல் காரர்கள்.

மிஞ்சிய பழஞ்சோற்றை

(6ம் பக்கம் பார்க்க)

# உரிமையை வென்றெடுக்க தொழிற்சங்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய உத்தியோகத்தர்கள், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க முடிவு செய்துள்ளனர்.

மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாததினுல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவிருப்பதாக இந்த உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர்.

மருந்தகங்களில் கடமையாற்றும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய உத்தியோகத்தர்களுக்கு 2 மணித்தியாலமும், வைத்தியசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு 4 மணித்தியாலமும் 1988 ஜூன் மாதம் முதல் மேலதிக வேலை நேரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனுலும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு 1989ம் ஆண்டு முதல் இன்று வரையும் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிஷயமாகப் பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி வைத்தியர்கள் சங்க மட்டக்களப்புக் கிளையினர், பிரதேச சுகாதாரப் பணிப்பாளருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் எதுவித பலனையும் அளிக்கவில்லை என்றும், தமது உரிமையை வென்றெடுக்கத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் தலைவரான திரு. எஸ். யோகராசா தெரிவித்துள்ளார்.

இதன் முதல் நடவடிக்கையாகத் தாம் சட்டப்படி வேலை செய்யப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

# பகைமைகொலையில் முடிந்தது! தீர்ப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த பகைமை கொலையில் முடிந்தது.

மன்னுர், பெரியபிள்ளைச்சி பொற்கேணியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்வூரைச் சேர்ந்த காசீம் அயூப்பகான் (வயது 27) என்பவரே அடிகாயங்களுக்குட்பட்டு மரணமானவராவார்.

மரணமானவருக்கும் அவருடைய உறவினர் ஒருவருக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்துவந்த பகைமை முற்றி சம்பவதினம் பொல்லால் தாக்குண்டு படுகாயம் விளைவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் படுகாயமடைந்த அயூப்கான் என்பவர் மன்னுர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். யாழ். ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு பின்னர் மரணமானுர்.

மரண விசாரணையை பதில் நீதவான் அன்ரனி மேற்கொண்டார். பிரேதபரிசோதனை யாழ். ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி கே. கனகரட்ணம் நடாத்தினுர். விசாரணை முடிவில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சொழும்புத்துறை கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டிறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: செ. கந்தசாமி, தலைவர்: சி. சி. வரதராசா, உப தலைவர் திருமதி செ.இராசேஸ்வரி, செயலாளர்: மு. குணரத்தினம், உப செயலாளர்: செல்வி த. ரூபி, மேலதிக உறுப்பினர் செல்வி க பிரேமலதா. (54)

0 0

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய நலன் புரிச் சங்கத்தினது கூட்டம் வித்தியாலய உப அதிபர் ப. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றுபோது பின்வருவோர்புதியநிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி ரஞ்சினி ஆனந்தக்குமாரசுவாமி, செயலாளர்: ரீ. எஸ். பாலசுந்தரம், பொருளாளர்: த. ஜெயாதி 5 பேர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. [54]

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 2-வது நடமாடும் செயலகம்

(மட்டக்களப்ப)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான 2வது நடமாடும் செயலகம், அடுத்த மாதம் 9ந் திகதி வெல்லாவெளியில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான ஓர் ஆலோசனைக் கூட்டம் அண்மையில வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வெல்லாவெளி உதவி அரச அதிபர் அலுவலகப் பதவிநிலை உதவியாளர் திரு. வீ, வீரகேசரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமையக உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம், சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. கா. தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திணைக்களப் பிரதிநிதிகள், கிராமசேவை உத்திபோகத்தர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெல்லாவெளிப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. நெல்சனுல் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

★ வெல்லாவெளி கொத்தணிப் பாடசாலைகளில் நிலவும் ஆகிரியர், தளபாடப் பற்ருக்குறை நீக்கப்படவேண்டும்

★ றெட்பானு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு, அனுதரவாகக் கிடக்கும் குழாய்க் கிணறுகள் திருத்தப்படவேண்டும்

★ நிதி ஒதுக்கியும் வேலைகள் ஆரம்பிக்கப்படாமலிருக்கும் வீரமுனை-அம்பிளாந்துறை, பட்டிருப்பு-திவுலானை, போரதீவு-பழுகாமம் வீதிகள் திருத்தப்படவேண்டும். (121)

## காவலூரில் கடுங்காற்று

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாகக் காவலூரில் கடுங்காற்று வீசுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாதிருக்கிறுர்கள்.

இதனுல் மீனுக்குத் தட்டுப்பாடும் விலைஏற்றமும் ஏற்பட்டுள்ளது.

## புகைக்கூடு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றினை ஏற்படுத்தவிருந்த 100 அடி உயரப் புகைக்கூடு கடும் காற்றுக் காரணமாக வானில் ஏவப்படவில்லை.

மேற்படி புகைக்கூடு பிறிதொரு விஷேட தினமொன்றில் பலர் முன்னிலையில் ஏவப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (51)

## ஹாட்லி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கோரிக்கையின் அடிப்படையில் உடனடியாக 6- ஆண்டு அனுமதிப் பரீட்சையை வைத்து மாணவர்களை தெரிவுசெய்து வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு புதிதாக யாழ். கல்விப்பணிப்பாளாராகப் பெறுப்பேற்ற இரா. சுந்தரலிங்கம் கல்லூரி நிர்வாகங்களைப் பணித்ததை அடுத்தே பாடசாலைகள் இரண்டாம் தவணைக்கு ஆரம்பிக்கப்பட்டபின்னர் கடந்த வாரம் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (52)

## சுன்னுகத்தில் விறகு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

சுன்னுக அரசாங்க மரக்காலையில் விறகு இல்லாமையால் சுன்னுக மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகிறுர்கள்.

கூடிய விலைக்கு வெளியாரிடம் விறகு வேண்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுகக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (ம)

## தென்மராட்சி தனிக்கோட்ட கல்வி அதிகாரி

(தென்மராட்சி)

தென்மராட்சி தனிக் கோட்டக் கல்வி நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி தபாலக வீதியில் காரியாலயம் அமைக்கப்பட்டு இம் மாத நடுப்பகுதியில் செயற்படவுள்ளது.

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரி ச. தனஞ்சேயன் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி ஏற்பார். 81)

# தொடரும் வீதி விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் பரவலாக இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் ஐவர் படுகாயமடைந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்தில் உரும்பராய் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் விஜயதாஸ் (வயது 35) படுகாயமடைந்தார்.

யாழ். காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சிற்றம்பலம் சுப்பையா (வயது 70) படுகாயமடைந்தார்.

மிருசுவில் கெற்பலியில் இடம்பெற்ற வான் விபத்து ஒன்றில் கெற்பெலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிதம்பரநடராசா படுகாயமடைந்தார்.

பூநகரி சங்குப்பிட்டியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் மன்னுர் செட்டியார் அடம்பனைச் சேர்ந்த எம். ஆறுமுகம் (வயது54) படுகாயமடைந்தார்.

ஆஸ்பத்திரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை. ஏனையோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

# "சிற்பம் ஓவியம் போன்று சுருக்கெழுத்தும் ஓர்கலையே" - நெல்லை பேரன்

(யாழ்ப்பாணம்)

'எமது நேரத்தைச் சுருக்கி விரைவாக எழுதக் கூடிய வகையில் சுருக்கெழுத்துக் கல்வி உதவி செய்கிறது. தத்துவ மேதை பெர்னுட்ஷவும் இன்னும் பல புகழ்பெற்ற எழுத்தாளர்களும் சுருக்கெழுத்தில் நாட்டம் கொண்டிருந்தார்கள். இது ஓர் கலைஎன்று கருதப்படினும் சிற்பம், ஓவியம், திரைப்படம், நாடகம், எழுத்துத்துறை போன்ற பொதுமக்களின் காட்சிக்கும் ரசனைக்கும் வைக்கமுடியாது. தனியார் நிறுவனங்களிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் பெரும் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவே இது இருக்கிறது. எனினும் நுட்பமான ஞாபகசக்தியுடனும் உடனுக்குடன் இன்னெரு குறியீட்டு மொழியில் மொழிபெயர்க்கப்படுவதனுலும் இதனை நாம் கலை சார்ந்த தொழிற்கல்வி என்றே அல்லது தொழில் சார்ந்த கலைக் கல்வி எனவே கருத இடமுண்டு. தனிய இதனைக் கலைக்கல்வி என்று கூறமுடியாது''.

இவ்வாறு எழுத்தாளர் நெல்லை க. பேரன் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரால் நடாத்தப்பெற்ற பட்டிமன்றத்திற்குத் தலைமை வகித்துத் தீர்ப்பு வழங்குகையில் கூறினுர்.

ஈழத்தின் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை அமரர் சி. இராமலிங்கம் நினைவாக நடைபெற்ற இப்பட்டிமன்றத்தில் சுருக்கெழுத்து தொழிற்கல்வி என்ற தலைப்பில் செல்விகள் சு. இராட்சிய லட்சுமி, கு. இலட்சுமிகுமாரி, சி. பிறேமலதா ஆகியோரும் கலைத்துறைக் கல்வி என்ற தலைப்பில் செல்விகள் இ. மாலினி, யோ. சந்திரகுமாரி, இ. யோகராணி ஆகியோரும் வாதிட்டனர்.

# "மக்கள் பலமே மாபெரும் சக்தி"

## அஞ்சலிக் கூட்டத்தில் பாப்பா

[நாவற்குழி]

''தமிழ் மக்கள் எமது இயக்கத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி எமது கரத்தைப் பலப்படுத்தவேண்டும். நீங்கள் ஒத்துழைப்புத்தரத் தவறும் பட்சத்தில் எமது எதிர்காலம் பரிதாபகரமானதாக இருக்கும்''

இவ்வாறு வீரவேங்கை முதலாவது லெப்டினன் கில்மனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. பாப்பா குறிப்பிட்டார்.

மீசாலை தெற்கு சிற்றுாரவைத் தலைவர் திரு. கனகரத்தினம் தலைமையில் மீசாலை பழைய புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில்: ''இன்று பல இளைஞர்கள் எமது இயக்கத்தில் சேருகிறுர்கள். அவர்கள் எம்முடன் சேருகிறுர்கள் என்று தாய், தந்தையரான நீங்கள் கலங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

சாவகச்சேரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கந்தன் பேசுகையில்: எமது இயக்கத்தின் பலத்தை மையமாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தும் இலங்கை அரசு எமக்குரிய உரிமைகளைத் தர மறுக்கும் பட்சத்தில் நாம் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை ஏற்படும். எம்மைப் பொறுத்தவரை இன்று மக்கள்பலமேமுக்கியம். பல வெளிநாடுகள் எமது செயற்பாட்டை நிதானமாக அவதானித்துக்கொண்டிருக்கின்றன. ஆகையால் நீங்கள் அதை நிரூபித்துக்காட்ட வேண்டும் என்றுர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி இணைப்பு

(மட்டக்களப்பு)

வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு மீண்டும் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

அடுத்தமாத முற்பகுதியில் நடமாடும் செயலகம் அங்கு அமைக்கப்பட விருப்பதால் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்துமாறு மட்டக்களப்பு அரச அதிபர் மட்டக்களப்பு பிரதேச தொலைத்தொடர்புப் பொறியியலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாகரையில் நடைபெற்ற நடமாடும் செயலகத்தை முன்னிட்டு தொலைத்தொடர்புப் பொறியியலாளர் திரு. ரி. இராஜேஸ்வரன் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனுக வாகரை உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு மீண்டும் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (121)

## சமரசம் ஏற்படுத்த முயற்சி

(புதுடில்லி)

இந்த ஆண்டு இடம்பெற வேண்டிய 'சார்க்' உச்சிமகாநாட்டை எங்கு நடத்துவது என்ற இழுபறியில், சம்பந்தப்பட்டமாலைதீவு, இலங்கை, ஆகிய இரு நாடுகளுக்கிடையே புதிய சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் சார்க் அங்கத்துவ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் முனைந்துள்ளனர்.

# உலகத் தமிழ் மாநாடுகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பேச முடிந்ததென்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

## மொறிசியஸ் தமிழரின் தனி முத்திரை

சென்னை, மதுரை மாநாடுகளில் நடைபெற்றதுபோலவே மாநாடு தொடக்க நாளைக்கு முதல்நாள் மாநாட்டு ஊர்வலமும், கலை நிகழ்ச்சிகளும் எழுச்சியுடன் நடைபெற்றன. அவை மொரிசியசுத் தமிழர்களின் தனி முத்திரையை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன.

வேறு எந்தத் தமிழ் முதுமொழியை மொரிசியசுத் தமிழர்கள் மறந்திருந்தாலும், 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற முதுமொழியை மட்டும் மறக்காமல் எங்கும் சொல்லிவருகிருர்கள்; எழுதியும் வைத்திருக்கிருர்கள். மாநாட்டு ஊர்வலத்திலும் அதுதான் பெரிய பதாகையாக வந்தது.

மொரிசியசுத் திருக்கோயில்களில் தேவார, திருவாசக, திருவருட்பா, திருமந்திரப் பாடல்களை உச்சரிப்புப் பிழையின்றி, நல்ல இசையுடன் சிறுவர், ஆடவர், பெண்டிர் என்ற பேதமின்றி அனைவரும் சேர்ந்து கூட்டு வழிபாடாகப் பாடுகின்றனர்.

வெளியே இருந்து முழுக் காற்சட்டையுடன் செல்பவரே கோயிலுக்குள் சென்றவுடன் அதைக் களையாமலே, அதற்கு மேலே ஒரு வேட்டியை அணிந்துகொண்டு, கற்பூரம் காட்டி மணியடித்துப் பூசை செய்கிருர். அதில் பிறவிப் பேதமில்லை.

## தமிழ் வாழும் இடம் கோயில்

உடைத்துச்சொல்லவேண்டுமென்ருல, மொரிசியசில் தமிழ் வாழும் ஒரே இடமான கோவில்களிலும் இந்த உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாக இப்போது சமஸ்கிருதம் போட்டிக்குப் போய்விட்டது.

ஆம்; மொரிசியசு அரசாங்கத்தால் தமிழ்நாட்டில் மொரிசியசின் மதிப்பியல் தூதராக அமர்த்தப்பட்டிருக்கும் தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்சம் அவர்கள் தன்னேடுகூடவே சில வடமொழிக் குருக்களையும் அழைத்துக் கொண்டு சென்று தமிழ்க் கோயில்களைப் புனிதமடையச் செய்திருக்கிருர்.

அண்மைக் காலம் வரை மொரிசியசுத் தமிழர்களை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது "உங்கள் மதம் எது?" என்ற கேள்விக்குத் 'தமிழ் மதம்' என்று கட்டுப்பாடாக விடை சொல்ல வைத்த 'மொரிசியசுத் தமிழ் ஆலயங்களின் கூட்டமைப்பே' தனது கட்டட அடிக்கல் நாட்டு விழாவைச் சமஸ்கிருத மந்திரங்கள் ஓதி, ஆரியச் சடங்கு சம்பிரதாயங்களுடன் நடத்தியதென்ருல் பார்த்துக் கொள்ளுங்கள்.

## 200 தமிழ்க் கோயில்கள்

1865 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இத்தீவிலுள்ள 200க்கும் மேற்பட்ட தமிழ்க் கோயில்களில் இனி சமஸ்கிருதம் ஒலித்தால் தமிழ் என்ன ஆகும் என்பது கேள்விக் குறியே.

20க்கும் மேற்பட்ட நாடுகளிலுமிருந்தும் 200க்கும்மேற்பட்ட பேராளர்களும், 500க்கும் மேற்பட்ட பார்வையாளர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தலைமையில் ஒரு குழு வந்திருப்பதையும், தொடக்க விழாவிலும், பாரதியார் சிலை திறப்பு விழாவிலும் ஔவை நடராசன் பேசிய சிறப்பான பேச்சையும் எடுத்துக்காட்டி ஒருவகையாக அவர்களை சமாதானம் பெறச்செய்தோம்.

எனினும் மாபெரும் தமிழ் அமைச்சராக - தமிழர் தலைவராக மலேசிய அமைச்சர் மாண்புமிகு டத்தோ சாமிவேலு மட்டும் அம்மாநாட்டில் பங்குகொள்ளாது இருந்தால் வெளிநாட்டுத் தமிழர்கள் கொஞ்சம்கூட நிறைவடைந்திருக்கமாட்டார்கள்.

இந்திய மத்திய அரசிலிருந்தும், தமிழக மாநில அரசிலிருந்தும் பொறுப்பான எந்தத் தலைவரும் பங்கு கொள்ளாத அந்தக் குறையை மாண்புமிகு சாமிவேலுதான் போக்கிவைத்தார்.

அதனல் ஒரு கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து 'தமிழக அரசும் அமைச்சர்களும் அக்கறைகொள்ளவில்லையென்ருல் வெளிநாடுகளில் தமிழைக் காப்பாற்ற முடியாது. முற்றிலும் தமிழர்களுக்குரியதான அந்த அரசாங்கமே தமிழ் மாநாட்டை மதிக்கவில்லையென்ருல், வேறு எந்த அரசாங்கம் மதிக்கும்! உலகத் தமிழ்நாட்டில் பங்குகொள்வதைவிட தமிழ் அமைச்சர்களுக்கு வேறு என்ன வேலை இருக்கமுடியும்? இதுபோன்ற மாநாடுகளில் கூட கட்சி அரசியலை சொந்தக் காரியங்களை முன்னிறுத்தி கலந்து கொள்ளத்தவறுவோமேயானல், தமிழ் எப்படி வளரும் தமிழினம் எப்படி உயரும்?" என்ற பொருள்பட அவர் பேசியது நூற்றுக்கு நூறு சரியே.

## தமிழகம் மீது தாக்கு!

மலேசியாவிலிருந்தே எத்தனையோ பிரச்சனைகளுக்கிடையில் ஒரு தமிழ் அமைச்சர் தனது நாட்டுப் பேராளர் குழுவுக்கே தலைமைதாங்கி வந்து கலந்துகொள்ள முடியுமானல், தமிழ் நாட்டு முதலமைசசர், முயன்ருல் எப்படி முடியாமல் போகும்? அவரால் முடியவில்லையென்ருல் பேராசிரியர் அன்பழகன் அவர்களை யாவது அனுப்பியிருக்கலாம்.

மாநாட்டில் இரு பொது அரங்குகளும், ஐந்து அமர்வுகளாக ஐந்து சிற்றரங்குகளும் நடைபெற்றன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட ஜப்பானிய மொழியோ, ஒரு சொல்லுக்கு ஒரு எழுத்து என்ற முறையில் வெவ்வேறு சொற்களுக்கு வெவ்வேறு எழுத்துக்கள் என எண்ணிறந்த எழுத்துக்களைக் கொண்ட சீன மொழியோ எந்த அறிவியல் முன்னேற்றத்திற்கும் தடையாக நிற்கவில்லை, ஜப்பானியர்களும், சீனர்களும் தங்கள் மொழிகளையே குறைகூறிக்கொண்டு உலகின் எத்துறை முன்னேற்றத்திலும் பின்தங்கியும் நிற்கவில்லை என்பதை கண்கூடாகத் தெரிந்திருந்தும் பல்கலைக்கழகத் துணைவேந்தராக உள்ள டாக்டர் வி. சி. குழந்தைசாமி போன்ருேர் அறிவியல் வளர்ச்சிக்குத் தமிழ் எழுத்தால் தடை' என்ற ஒப்பாரியை அங்கு வந்தும் வைத்துக் கொண்டது பொருத்தமாகப்படவில்லை.

அப்படித்தான் ஆய்வுக் கட்டுரைகளில் புதிய சிந்தனைகள் பொங்கி வழிந்தனவா என்று பார்த்தால் பல கட்டுரைகளில் ஆய்வு என்ற அம்சமே இல்லை. அவற்றை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்று தெரியவில்லை.

எனினும் கடல்கடந்த நாடுகளில் வாழ்தமிழர்கள் மத்தியில் புதுவேகத்தையும் புதிய நம்பிக்கையையும் ஊட்டுவதாக இம்மாநாடு அமைந்திருந்ததை மறுக்க முடியாது.

## தென்னபிரிக்க தமிழர்களின் உணர்வு

குறிப்பாக தென்னபிரிக்கா ரீயூனியன் தமிழர்களின்உணர்வும் உரைகளும் மெய்சிலிர்க்கச் செய்தன.

தமிழர்கள் பெரும்பாலும் ஆங்கில அடிமைகள் என்பதும் இம்மாநாட்டில் வெளிப்பட்டது. ரீயூனியனில் உள்ள ஒரு தமிழர் பிரஞ்சுப்பேராசிரியர். அவருக்குத் தமிழும் ஆங்கிலமும் அவ்வளவாக வரவில்லை. பிரஞ்சு மொழியில் ஒரு அரிய கட்டுரையைப் படிக்க விரும்பினர்.

"கிரேக்கப்பண்பாடு என்பது தமிழன் வழங்கிய கொடை. ஏதென்சு நகரத்தை உண்டாக்கியவன் ஒரு பாண்டிய மன்னன். அங்குள்ள புராதனமான கோவில் தமிழர் கட்டியதே. அங்கிருக்கும் சிலைகள் அனைத்தும் தமிழ்த் தெய்வங்களே" என்ற விபரங்களை நேரில் சென்று ஆராய்ந்து, படங்களுடன் வரலாற்று அம்சத்துடன் பிரஞ்சு மொழியில் அக் கட்டுரையை எழுதியிருந்தார். ஆங்கிலம் அல்லது தமிழில்தான் கட்டுரை படிக்கலாம் என்று கண்டிப்பாகச் சொல்லப்பட்டதால், தனக்குத் தெரிந்த கொச்சைத் தமிழில் அப்பிரஞ்சுக் கட்டுரையை அவர் தமிழில் சொன்ஞர்.

தென்ஞரிக்கத் தமிழர்களும் பல புதிய செய்திகளைக் கொண்ட சில ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தைச் சேர்ந்த அதன் தலைவர் டாக்டர் ஆர். இ. ஆஷர் மற்றும் டி. மாரிமுத்து, இரா. முத்துக்குமாரசாமி' மொரிசியசில் அதன் நிர்வாகிகளான திருமலைச் செட்டி, சந்நியாசி படையாட்சி போன்ருேர் அனைத்து நிகழ்ச்சிகளையும் உடனிருந்து சிறப்பாக நடைபெற உதவினர்.

மொரிசியசைப் பொறுத்தவரை இம்மாடு பெருவெற்றி பெறஅமைச்சர்மாண்புகு ஆறுமுகம் பரசுராமனுடன் நாடாளுமன்றச் செயலர் பழனியாண்டி, சொர்ணம் சகோதரர்கள், பேராசிரியர் அருணசலம் புட்பரதம் திருமலைச் செட்டி சகோதரர்கள் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழாசிரியர்கள் மற்றும் ஆலய நிர்வாகிகள், நகராட்சித் தலைவர்கள் மகளிர் வழிபாட்டு மன்றங்களைச் சார்ந்தவர்கள் ஆகியோர் அயராது பாடுபட்டனர். அவர்களுக்கு உலகத் தமிழர்களின் நன்றி உரியதாகும்.

தமிழினத்திற்கே உரிய சாபத் தீட்டையும் இங்கு நாம் சொல்லித்தான் ஆகவேண்டும். மொரிசியசில் தமிழர்கள், இந்திக்காரர்கள், ஆந்திரர்,மராட்டியர் அனைவரும் கிரியோலையே பேச்சு மொழியாகக்கொண்டிருப்பதால் ஒரு இனத்தார் விழாவில் மற்றவர்கள் தாராளமாகக் கலந்து கொள்கின்றனர். அம்முறையில் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த தமிழரல்லாத இந்திய வம்சாவழியினர் பலர், நாம் இந்தியாவிலிருந்து மாநாட்டுக்குச் சென்றவர்கள் என்பதால், இந்தியா தங்கள் தாய் நாடு என்ற பாசத்தில் எம்முடன் அளவளாவினர்கள்.

## மொறிசியஸ் தமிழர்கள் உழைப்பாளிகள்

அப்போது மாநாட்டு ஏற்பாடுகளில் கண்ட சில குறைபாடுகளை தம்மிடம் சுட்டிக்காட்டி, "இந்தத் தமிழர்களே இப்படித்தான். நாலுபேர் சேர்ந்தால் போதும். குடித்து விட்டுக் கும்மாளம் போடுவார்கள் விடயத்தைக் கோட்டை விட்டு விடுவார்கள்" என்று நம் மொறிசியஸ் தமிழர்கள் பற்றிய தமது கசப்புணர்வை வெளியிட்டார்கள். கூடவே "இந்த நாட்டில் நல்ல உழைப்பாளிகள் எல்லாம் தமிழர்கள்தான். ஆனல் குடிதான் அவர்களைக் கெடுக்கிறது" என்று அனுதாபப் பட்டும் பேசினர்கள்.

இந்த (தமிழ்) நாட்டில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் குடிதான் தமிழன் குடியைக் கெடுக்கிறது எனவே மதுவிலக்கு என்பது உலகத்தில் எந்த இனத்திற்குத் தேவைப்படுகிறதோ இல்லையோ, தமிழினத்திற்குக் கட்டாயம் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் தமிழுணர்வு பொங்கி வழிந்த பொற்காலம், இங்கு மதுவிலக்கு நடைமுறையில் இருந்தகாலம் தான் என்பதையும் மறந்து விடக் கூடாது.

அடுத்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை லண்டனில் நடத்தப் போவதாக மொரிசியசு மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. ஆனல் இங்கு திரும்பிய பிறகு மீண்டும் தமிழ்நாட்டிலேயே நடக்கும் என்று தெரிகிறது.

எங்கு நடப்பினும், (1) உலகத் தமிழர் வங்கி நிறுவுதல்: (2) எழுத்துச் சீர்திருத்தம் உட்படத் தமிழில் எந்தச் சீர்திருத்தம் கொண்டுவந்தாலும் அதை உலகத் தமிழர்களின் ஒருமித்த கருத்தறிந்த பிறகே மேற்கொள்ளப்படவேண்டும். (3) உலகத் தமிழர் பற்றிய விவரக் கோவை அதிகாரபூர்வமாக வெளியிடப்படவேண்டும். (4) உலகத் தமிழர் உசாவல் நிலையம் ஒன்று தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் கிளைகளைக் கொண்டதாக நிறுவப்படவேண்டும். (5) உலகத் தமிழர் சுற்றுலா நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு; தமிழ்நாட்டுக்கும் தமிழர்வாழும் நாடுகளுக்கு இடையே சலுகைக் கட்டணத்தில் போக்குவரவு நடைபெற ஒழுங்கு செய்யவேண்டும்.

இன்னேரன்ன தமிழுக்கு மட்டுமின்றி, தமிழர்களுக்கும் ஆக்கம் ஊட்டும் பணிகளை முதலாவதாக மேற்கொள்ள வேண்டும்.

இவைதான் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி உண்மைத் தமிழர்கள் விரும்பும் எதிர்பார்ப்புகளாகும்.

நன்றி: "எழுகதிர்" (தமிழ்நாடு)

# முச்சந்தியில் மூன்றுபேர்

(4ம் பக்கத் தொடர்ச்சி

அரைத்து தோசை சுட்டுக் கொடுத்து, வயிருர உண்ண வந்தவனுக்கு வயிற்றுவலியோடு அனுப்பியதுமுண்டு. பிழிந்த தேங்காய்ப் பூவில் சம்பல் அரைத்து எத்தனை 'மனித மாடு'களுக்கு ஆகாரம் கொடுத்தோம்.

அன்ருடம் பாவிக்கும் அமெரிக்கன் மாவுக்கு சாம்பல் கலந்து சாவின் விளிம்பில் கொண்டுபோக நிறுத்தினவர்களும் எம்மவர்கள்தான்.

மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்படவேண்டும். பணத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட இந்த உலகத்தில், தான் சில நல்லகாரியங்களை செய்துவிட்டுப்போகும் புண்ணியவான்களாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் கலப்படம் செய்து, ஒருவனின் உயிரைப் போக்குவதிலும் பார்க்க நல்ல காரியங்களைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## லேபல் அடிக்கிருர்கள்

கருத்துச் சொல்லும் இரண்டாமவர் அச்சுக் கூடங்களில் அடிக்கடி செல்லும் ஒரு அன்பர். அவர் சொல்கிருர் கேளுங்கள்.

"கலப்படம் செய்வதில்மூலகர்த்தாக்கள் இந்த அச்சுக் கூடத்தை வைத்திருக்கும் சில பேர்தான். நான் கண்ணுல் கண்ட சில சம்பவத்தை சொல்லாமலும் இருக்கமுடியாது. அன்ருெருநாள் ஒரு அச்சுக்கூடத்துக்கு அலுவலாகப் போனேன். ஒருவர் வந்தார். சில லேபிள்களைக் கேட்டார். ஒரு கொஞ்சக்காசை வேண்டிக்கொண்டு லேபல் கொடுக்கப்பட்டது. அது யாழ்ப்பாணத்தில் ஒரு பண்ணையில் இருந்து உற்பத்தியாகும் பொருட்களின் போலி லேபல்கள். அதுமாதிரி குளுக்கோஸ், பற்பொடி போன்ற லேபில்கள ஏற்கனவேஅச்சடிக்கப்பட்டு அச்சுக் கூடங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய இந்தச் செயலை கண்காணித்து, மனிதனுக்கு விரோதமாக செயல்படும் போலி லேபல்களை நிறுத்தவேண்டுமென்று கேட்கிருேம்.

## ஆய்வாளர் கருத்து

இவர் ஒரு அரசாங்க அதிகாரி, இந்தத்துறையில் சம்பந்தப்பட்டவர். அவரின் கருத்து இவை.

வடபிரதேசத்தில் சிவில் நிர்வாகம் கொஞ்சம் கொஞ்சம் சீருக்கு வருகிறது. பல பொறுப்பற்ற செயல்களை கண்காணித்து அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தக் 'கலப்படக்காரர்கள் பற்றி கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்.

"முன்பென்ருல் இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம். நான் சில கடைகளுக்கு பரீட்சிக்கச் சென்ற போது, பல பொருட்கள் நாங்கள் பாவிக்கக் கூடாத தன்மையில் விற்பனைக்கு விநியோகிக்கப்பட்டுக்கிடக்கின்றது. இந்தியாவில் உள்ள 'நெஸ்கபே' மாதிரி போலி லேபலில் தரங்கெட்ட 'நெஸ்கபே' விற்பனைக்கு இருக்கிறது. கோப்பியின் வாசமே இல்லை. பற்பொடி கொழும்பில் உள்ள தரமான கம்பனிகளின் பெயரில் இங்கு விற்பனைக்கு இருக்கிறது. இந்தப் போலிப் பற்பொடி விற்பனையில் வியாபாரிக்கு அதிக லாபம் இருப்பதால்தரமுடையபற்பொடியை விற்பனைக்கு வைக்கிருர்களில்லை.

குழந்தைகள் பாவிக்கும்' ஐஸ்கிறீம்' அதில் கூட சில கம்பனிகள் 'சக்கரின்' சேர்க்கிருர்கள். பிரசித்திபெற்ற வைத்தியர்களினல் தலைக்கு வைக்கும் தைலங்கள் கூட போலியாக தயாரித்து நோயாளிக்கு மேலும் நோயைக் கொடுக்கிருர்கள்.

நல்லெண்ணெயில் கடலை எண்ணெய் கலக்கப்படுகிறது. சோடாவில் கூட கலப்படம் செய்கிருர்கள்.

நல்ல கம்பனியால் விநியோகிக்கப்படும் முகப்பவுடர்கள், தரமற்றவையாக இங்கு தயாரிக்கப்பட்டு போலி லேபல் ஒட்டப்பட்டு விற்பனைக்கு இருக்கின்றது. இதனல் முகங்களில் பருக்கள், சரும சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன.

அதிகம் போவானேன்: பெற்ருேல், டீசல்களில் இப்போது நியாயமான கலப்படம். இந்த சமுதாய துரோகச் செயல்களை செய்பவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கலப்படவாழ்க்கை எம்மவர்களை மட்டும் பீடித்த நோயல்ல. உலகத்தில் பலர் இப்படி வாழ்கிருர்கள். அப்படி நாம் ஏன் வாழவேண்டும். நல்லவர்களாக வாழ முயற்சிப்போம்.

- மணிசேகரன்

# கருத்தரங்கு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக அண்மையில் கருத்தரங்கொன்று நடைபெற்றது.

முள்ளி ஆரம்பப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் திரு. எஸ். சந்திரராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கில் பின்தங்கிய முள்ளிக் கிராமத்திற்கு எதிர்காலத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும், அங்குள்ள மக்களின் வேலை வாய்ப்பு, கல்வி, சுகாதாரம் ஆகியன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

இறுதியில் அவ்வூர் மக்களால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (71)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். – வண்ணை – கன்னதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான அந்தரித பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7 - 30 மணியளவில் நடைபெறவுள்ளது. இன்று புதன்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும்.

## நவாலி கொத்தணி ஆசிரியர் தினம்

(ஆனைக்கோட்டை)

நவாலி கொத்தணிப் பாடசாலைகளின் ஆசிரியர் தினம் இம்மாதம் 18-ம் திகதி கொத்தணி அதிபர் ஏ. மனோகரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக வடபிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் பிரதம விருந்தினராக மருதனமடம் கோட்டம் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரனும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்கள். (139)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்மாண மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான மெய்வலலுநர் போட்டி 1990, நாளை 17-ம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது,

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (153)

## 40--வது ஆண்டு விழா

(பண்டத்தரிப்பு)

மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தின் கட்டிடத் திறப்புவிழாவும், 40ஆவது ஆண்டுவிழாவும் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

நிலையத் தலைவர் திரு. செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதியகட்டிடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்: திரு. க. சிவசம்பு, வலி தென்மேற்கு பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. இராஜசுந்தரம் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (72)

## மக்கள் பலமே

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இளைப்பாறிய ஆசிரியை திருமதி பூமலர் நடேசன் பேசுகையில், ''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் இயங்கும் ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான். அதனால்தான் நாம் இன்று அதைப் பின்பற்றுகிறோம். ஏனையவை எல்லாம் சுயநலக் கூட்டங்கள்; உலகில் பலர் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். ஆனால் நல்லவற்றைப் புரிந்து நல்லதையே செய்து சிலர் வரலாற்றையே உருவாக்குகிறார்கள் என்றார்.

அஞ்சலிக்கூட்டம்தொடங்க முன்னர் வீரவேங்கைகளான கில்மன், மயூரன், கமல் ஆகியோரது நினைவு உருவப்படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. கில்மனின்உருவப் படத்தை வீரமரணமடைந்த பெண்புலிநிகிந்தாவின் தாயார் திரைநீக்கம் செய்து வைத்தார். மயூரனின் உருவப் படத்தை கமலின் தாயாரும், கமலின் உருவப்படத்தை மயூரனின் தந்தையாரும் திரைநீக்கம் செய்துவைத்தனர். [107]

## அநாதை மாணவர்களுக்கு உதவத் திட்டம்

(நாவற்குழி)

தாய் தந்தையற்ற மாணவர்களுக்கு உதவிசெய்யும் முகமாகயாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலிருந்தும் 18 வயதிற்குட்பட்ட தாய் தந்தையரற்ற மாணவர்களின் விபரம் யாழ். கல்வித்திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

இதற்கான மாதிரிப்படிவம் யாழ். கல்விப்பணிப்பாளரினால் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (107)

## "தமிழ் மொழியில் ஒப்பமிட வேண்டும்"

### தமிழ்த்தினத்தை முன்னிட்டு இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளில் தமிழ்மொழித்தினம் கொண்டாடப்படுவது வரவேற்கத்தக்கது! இதேவேளையில் ஆங்கிலமொழியிலேயே தமது ஒப்பங்களை இடுவதை வழக்கமாகக் கொண்டுள்ள கல்வித்திணைக்கள அதிகாரிகளும், ஆசிரியர்களும் தமிழ்த் தினத்தைத் தொடர்ந்து தமது ஒப்பங்களைத் தமிழ்மொழியிலேயே இட்டுவர முன்வரவேண்டும் என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் கல்வித்திணைக்களம் இதற்கு வழிகாட்டுவதுடன் தமிழ்மொழியிலான சுற்றுநிருபங்களில் அதிகாரிகள் தமது ஒப்பங்களைத் தமிழ்மொழியில் இட்டு முன்மாதிரிகாட்ட வேண்டுமென்றும் அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (54)

## புனர்நிர்மாணகடன் திட்டம்

(மன்னார்)

பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை கிராமிய வீடமைப்பு உப திட்டத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் தற்சமயம் மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து உவித அரசாங்க அதிபர் பகுதிகளிலும் வீடமைப்பு அதிகாரிகள் ஊடாக ஒவ்வொரு கிராம சேவை அலுவலர்களுக்கும் பத்துப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி புனர்வாழ்வு குடும்ப அளவீட்டுப் படிவம் மூலம் எவ்வித நன்கொடையும் பெறாதவர்கள் இப்படிவத்தை பூர்த்தி செய்து புதிய வீடு கட்டுவதற்கும், வீட்டைத் திருத்துவதற்கும், அல்லது வீட்டில் மின்சார திருத்த வேலைகள் போன்றனவற்றிற்கும் 15000 ரூபாமுதல் 50,000 ரூபா வரையிலான கடனை இலகுவாகப் பெறலாம்.

இதற்கான வேலைகளை மன்னார் தேசிய வீடமைப்பு அதிகாரசபை மேற்கொண்டுவருகின்றது. இதேவேளையில் மன்னார் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை 6,500 வீடுகளை நன்கொடையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வருட இறுதிக்குள் கட்டிக் கொடுக்கவும் ஆரம்ப வேலைகள் பூர்த்தியாகி உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட முகாமையாளர் திரு. கிறிஸ்கந்தவேல் மேற்கொண்டுவருகின்றார். (85)

## ஸ்தாபகர் உருவச்சிலை திரை நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியின் ஸ்தாபகரான வண. அருட்திரு. பெர்டினன்ஸ்பொனல் அடிகளாரின் திரு உருவச் சிலை இம்மாதம் 24ம் திகதி மேற்படி கல்லூரியில் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

மேற்படிக் கல்லூரியின் பழையமாணவர் ஒன்றியம் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (121)

## இந்திரமூலம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சங்கம் ஒரு வருட காலத்துள் பல வேலைத் திட்டங்களைச் செய்து முடித்தது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இங்கு சங்க அங்கத்தவர் மட்டுமல்ல ஏனையோரும் பயிற்சி பெற்று வருவது வரவேற்கத் தக்கதாகும். இச்சங்கம் உரிய முறையில் ஒழுங்காக நடைபெற்று வருவதால்தான் இதனை பதிவு செய்தேன் என்றார்.

மெதடிஸ்த திருச்சபையின் வண்ணார்பண்ணை குரு ஏ. ஜெபநேசன் முள்ளி தொழிலாளர் கூ. சங்க உறுப்பினர் திரு. உதயகுமார். கி. சேவையாளர் திரு. சந்திரராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (71)

## இப்படியும் நடக்கிறது

தினசரிப் பத்திரிகைகளில் அல்லது வார-மாத சஞ்சிகைகளில் தங்களைப் பற்றி செய்திகள் கட்டுரைகள் வெளியிடவிரும்புவதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம்:

சிலர், விஷயத்தைச் சொல்லுவார்கள். ஆனால் தங்களின் பெயர் எக்காரணம் கொண்டும் வெளிவரக் கூடாது என்று 'தடை' போடுவார்கள். வேறு சிலரோ தங்களின் பெயர் வெளிவரவேண்டும் என்பதற்காகவே எதையாவது சொல்லி விஷயத்தை வெளிவரச் செய்துவிடுவார்கள். பின்னர் மாட்டியும் கொள்வார்கள். இவர்களில் இன்னுமொரு ரகத்தினரும் உண்டு. அதாவது, முக்கிய செய்தியாளரைப் பிடித்து... ''என்னப்பா... நம்மைப்பற்றி ஒன்றையும் பத்திரிகையில காணோமே... ஏதாவது எழுதவேண்டியது தானே...'' என்றுகாக்காபிடித்து காரியம் சாதிப்பவர்களும் உண்டு. இத்தனை பேர்களில் வேறு ரகத்தினரும் உண்டு. 'சும்மா கிடந்த சங்கைஊதிக் கெடுத்தானும் ஆண்டி' மாதிரி எதையோ உளறிவிட்டு பின்னர் 'ஏன் தான் இப்படிச்சொன்னேன்' என்று மண்டையை உடைப்பவர்களும் உண்டு.

ஒரு சின்ன ஞாபகம்: உகண்டாவை ஆண்ட சர்வாதிகாரி இடி அமின் தன்னைப்பற்றி பத்திரிகைகள், வானொலிகள் புகழ்பாடுவதை பெரிதும் விரும்புபவர்.

அவரது ஆட்சிக்காலம். சில நாட்களாகஅவரைப்பற்றி சர்வதேச மட்டத்தில் ஒரு செய்தியும் வெளிவராதது அவர் மனதைப் பெரிதும் புண்படுத்தியது. யோசித்தார். கடைசியில் முடிவு எடுத்தார். என்ன நடந்தது? சர்வதேச பத்திரிகைகளில் எல்லாம் 'நியூஸ்' ஓகோ என்று வந்திருந்தது! என்ன மாதிரியான செய்தி அது? இது தான்:

''மலகூடம் சென்ற இடி அமின் வழுக்கி விழுந்தார் எழும்பமுடியாமல் கஷ்டப்பட்ட இடி அமினை அவரது உதவியாளர்கள் சிரமப்பட்டு தூக்கிச் சென்றனர்...''

வழுக்கி விழவேண்டும்... செய்தி வர வேண்டும் என்று முடிவு எடுத்து, உண்மையிலேயே இடி அமின் வழுக்கி விழுந்தார் தான். ஆனால் தமக்கு பாரிய அடி உடம்பில் கிடைக்கும் என்று அவர் யோசித்து இருக்கமாட்டார். எது எப்படியானாலும் அடுத்த நாள் பத்திரிகைகள் வானொலிகள் செய்தி வெளியிட்டது இடி அமினுக்கு பெரும் ஆறுலாக இருந்தது. (தகவல்; இடி அமின் வாழ்க்கைக் குறிப்புகள்).

இதே மாதிரியான நிலை தான் நமது அமைச்சர் ரஞ்சனுக்கும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இந்திய கடவுச்சீட்டு பெற்றுக்கொண்ட மலையகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப் போவதாகவும், மலையகத்தமிழர்களை நாடுகடத்த தலைமன்னார்- இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு இந்தியாவை கேட்டுள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சன் 'அவிட்டு' விட்டார் ஒரு செய்தியை. என்ன நடந்தது? ஏன் தான் சொன்னோம் என்று ஆகிவிட்டது அவருக்கு! அந்த அளவுக்கு இந்தியாவிலும் ஏன் இலங்கையிலுமே 'பிறஷர்' உண்டாகிவிட்டது!

'பப்ளிஸிட்டி' விரும்புவர்களுக்கு இப்படியும் 'ஆப்பு' விழுவது உண்டு!

'ஊடுருவி'

## "அத்தியாவசிய பொருளுக்கு வரி விதிக்கப்படவில்லை"

### - மாத்தயா

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய பொருட்களுக்கு அதிக விலை அறவிடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு. கோ. மகேந்திரராசா மாத்தயா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகளிடையே உரையாற்றுகையில் திரு. மாத்தயா இந்த எச்சரிக்கையை விடுத்தார். இக் கூட்டத்திற்கு தலைமை வகித்து திரு. மாத்தயா தொடர்ந்து உரையாற்றுகையில்,

''எம்மால் வரி விதிக்கப்படாத பொருள்களுக்கு மக்களிடமிருந்து கூடுதல் விலை அறவிடப்படுவதை பொதுமக்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

''இது தொடர்பாக பொதுமக்கள் அனைவரும் அறியக்கூடிய வகையில் வரிவிதிக்கப்படாத பொருள்கள் எனவேறுபடுத்தி வரிவிதிக்கப்படுகின்ற பொருள்கள் சிவப்பு எழுத்துக்களாலும், உண்மையான விலையும் வரியினால் உள்ளடக்கப்பட்ட விலையும் எழுதப்பட்டு விலைப்பட்டியல் தொங்கவிடப்படவேண்டும்.

''அத்தியாவசிய பொருள்களுக்கு வரிவிதிக்கப்படாத போதிலும் எமது பெயரை பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் கூட்டி விற்கப்படுகிறது. பொருள்கள் நியாயமான விலைக்கு விற்கப்படவேண்டும்.

இறக்குமதிப் பொருள்களின் விலை கொழும்புவிலைஅதிகரிக்கபடுமானால்எமது அனுமதியை பெற்றே யாழ். மாவட்டத்தில் விலை அதிகரிப்பு செய்யப்பட வேண்டும். விலை அதிகரிப்பிற்கான காரணமும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

வர்த்தகர்களிடமிருந்து லாபத்தில் ஒரு பகுதியே போர் நிதியாகப் பெறப்படுகின்றது. அத்திாவசியப் பொருள்களின் மேல் வரிசுமத்தி எமக்கு அவப்பெயர் ஏற்படுத்துகிறது என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. எஸ். டொமினிக், அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், மாதிரி நிர்வாகமையப் பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

## வங்கிக்கு கொண்டு சென்ற ரூ. 25,000 அபேஸ்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு வைப்புச்செய்யக் கொண்டு செல்லப்பட்ட 25 ஆயிரம் ரூபா பணம் அபேஸ் செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து வங்கிக்கு வந்திருந்த வாடிக்கையாளர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளதாவது:

காரைக்கலட்டி தும்பளை மேற்கைச் சேர்ந்த க. சின்னத்தம்பி என்பவர், பருத்தித்துறை இலங்கை வங்கியில் 25 ஆயிரம் ரூபாவை வைப்புச் செய்வதற்காக வங்கிக்குக் கொண்டுசென்று, வங்கியின் வெளிப்புற மேசையில் பண

(8-ம் பக்கம் பார்க்க)

## நயினுதீவு ஆலய

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இவ்வுற்சவ காலங்களில் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வரும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களின் வசதிகருதி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்றுமுன்தினம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மகாநாடொன்று நடைபெற்றது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிக்காட்டுவான், இறுப்பிட்டி ஆகிய இரண்டு இறங்குதுறைகளும் பாவிக்கப்படும். யாழ்ப்பாணம் - குறிக்காட்டுவான், யாழ்ப்பாணம் - இறுப்பிட்டி ஆகிய இடங்களுக்கு மினிபஸ்களும் வட பிராந்திய போக்குவரத்து பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்காட்டுவான், இறுப்பிட்டி இறங்குதுறைகளில் மின்சாரவசதி, குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதிகள் யாவும் செய்யப்படவிருக்கின்றன.

ஜூன் மாதம் 10 ந்திகதிக்கு இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகளின் சொந்தக்காரர்கள் யாவரும் அதற்கான தகமைப்பத்திரங்களை படகுதகமைடரிசோதகரிடமிருந்துபெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அதன்பின் சேவைக்கு தகமைகண்ட படகுகள் வேலணை உதவி அரசாங்க அதிபரிடமும் ஊர்காவற்றுறை சுங்க இலாகாவிடமும் பதிவுசெய்யப்பட வேண்டும்.

முதலுதவிப்பெட்டி, உயிர் பாதுகாப்பு அணிகள் ஆகியவற்றை சேவைக்கு விடப்படும் படகுகளில் கட்டாயமாக இவற்றை வைத்திருத்தல் வேண்டும்.

இறுப்பிட்டி, குறிக்கட்டுவான் நயினுதீவு படகுக்கட்டணம் நாலு ரூபாயாக இருக்கும்.

நெடுந்தீவு வலம்புரிபடகும் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படும். குறிக்கட்டுவானும் நயினுதீவுக்கும் இடையில் இது சேவையில் ஈடுபடுத்தப்படும்.

ஒருபடகு அவசர உதவிக்காக எந்நேரமும் தயார் நிலையில் இருக்கும்.

குறிக்கட்டுவான், இறுப்பிட்டி இறங்குதுறைகளிலிருந்து யாழ்ப்பாணம் போக வாகன ஒழுங்குகளை சீராக நடத்துவதற்கு மினிபஸ் சங்க பிரதிநிதி, வட பிராந்திய போக்குவரத்துச்சபை பிரதிநிதி, வேலணை உதவிஅரசாங்க அதிபரின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழுவொன்று இருதுறைகளிலும் உடனுக்குஉடன் பிரச்சனை தீர்ப்பதற்கு அந்தந்த இடங்களால் இயங்கும்.

ஊர்காவற்றுறை சுங்க இலாகா பகுதியினர் படகுகள் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேவையில் ஈடுபடுகின்றதா என்பதை மேற்பார்வை செய்வார்கள்.

வழமைபோல் சேவையாற்றும் தொண்டர் அமைப்புக்கள் இம்முறையும் விழாவில் ஈடுபடுத்தப்படுவார்கள். இவற்றை ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகள் சம்பந்தமாக ஜூன் மாதம் 18-ந் திகதி கூட்டம் நடைபெறவிருக்கிறது.

நயினுதீவு நாகபூசணி அம்மன் இறங்குதுறை மேடை கடல் அரிப்பால் முற்றுக பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இதனுல் இறங்குதுறையில் வள்ளத்தை அணைக்க தடையாகவுள்ளது இறங்குதுறை மேடைவீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் திருவிழா தொடங்கு முன் திருத்தி முடிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இம்முறை இரவிலும் படகுச் சேவைநடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (153)

## கைதடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியகலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில்கைதடி கமநலச்சேவை நிலையத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது பிரதேசத்திலுள்ள அபிவிருத்தி வேலைகளை எவ்வளவு விரைவாகச் செய்யமுடியுமோ அவ்வளவிற்குச் செய்ய வேண்டும்.

எமது மனச்சாட்சியின்படி எல்லோரும் கடமைசெய்தால் மகிழ்ச்சியாக வாழலாம்.

நாம் மக்களுக்குநல்லசேவை செய்யவேண்டும். இந்தப் பிரதேசத்திலுள்ள சகல குறைபாடுகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வேன்''. (து)

## வங்கிக்கு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை வைத்துவிட்டு, படிவத்தை நிரப்பிக் கொடுத்துவிட்டுப் பணத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தார். அந்தச் சில நிமிடங்களில் பணம் அபேஸ் செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்துச் சோதனைகள் இடம்பெற்ற போதும் பலன் கிடைக்கவில்லை. (52)

# சிங்கப்பூர் செல்லும் பொலிஸ் கோஷ்டி

(பருத்தித்துறை)

சிங்கப்பூரில் போக்குவரத்து சம்பந்தமான விசேட பயிற்சி பெறுவதற்காக இலங்கையிலிருந்து ஐந்துபேரடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்றை பாதுகாப்பு அமைச்சு சிங்கப்பூருக்கு அனுப்பவுள்ளது.

சிங்கப்பூருக்குச்செல்லவுள்ள இப்பொலிஸ் கோஷ்டிக்கு பொலிஸ்இன்ஸ்பெக்டர் டில்ப்குமார் செல்வராஜ் தலைமை தாங்கிச் செல்கிறுர். இக்குழுவில்அடங்கும் ஏனையபொலிஸ் அதிகாரிகள் சிங்களவர்களாவர்.

இக்குழு இன்னும் இரண்டொரு தினங்களில் சிங்கப்பூருக்குச் செல்லும் என்றுதெரிவிக்கப்பட்டது.

இப்பொலிஸ் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் செல்லும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் டிலிட்குமார் செல்வராஜ் பருத்தித்துறை புலோலி மேற்கைச் சேர்ந்தவராவர். (52)

## நிவாரணம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான 50 வீத சம்பள நிவாரணக் கொடுப்பனவை வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும்வழங்குமாறு கோரும் மகஜரை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரிடம் ஊழியர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இச் சம்பள நிவாரணக் கொடுப்பனவைப் போக்குவரத்து அமைச்சு மூலம் பெற்றுத்தருமாறும் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. (54)

## யாழ்.காணிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வகத்தில் நேற்றுமுதல் 1989 ஏப்ரல் 30 வரை எழுதப்பட்ட உறுதிகள் பதிவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன

வெகுவிரைவில் 1989 டிசம்பர் 31வரை எழுதப்பட்டஉறுதிகள் பதிவுக்கு ஏற்கப்படும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

207 நொத்தாரிசுமார் இந்தக் காணிப்பதிவக எல்லைக்குள் நொத்தாரிசுக் கடமையாற்றுயாற்றுகிறுர்கள். இந்தக்காணி பதிவக எல்லைக்குள் வலிகாமம் யாழ்ப்பாணப் பட்டினம், தென்மராட்சி, தீவுப்பகுதிகள் ஆகியவை அடங்குகின்றன. (153)

## யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களுக்கு 31,450 லீற்றர் பெற்ரேல் வழங்கப்பட்டது. அத்துடன் 37,250 லீற்றர் டீசலும் வழங்கப்பட்டது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் ஐந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று 13,900 லீற்றர் பெற்ரேலும், 14,800 லீற்றர் டீசலும் வழங்கப்பட்டது.

இதனையடுந்து யாழ்ப்பாணத்தில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு நீங்கலாம் எனத் தெரிகிறது. (153)

## திக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேதம் திக்கம் வடிசாலைக்கு ஏற்பட்டது.

மீண்டும் ஏறக்குறைய 45 லட்சம் ரூபா செலவில் திக்கம் வடிசாலை புனாமைக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 9-ம் திகதி திக்கம் வடிசாலையில் மதுசார உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பனஞ்சாராயம் போத்தலில்அடைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெகுவிரைவில் இந்தப் பனஞ்சாராயம் விற்பனைக்கு விடப்படவிருக்கிறது.

வடிசாலையில் மதுசார உற்பத்தி இந்த வருடம் ஏறக்குறைய 20 சதவீதக் கொள்ளளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

பனஞ்சாராயம் போத்தலில் அடைக்கும் தொழிற்பாடு யந்திரமயமாக்கப்பட்ட பின்பு உற்பத்திகள் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திக்கம் வடிசாலை இயங்கத் தொடங்கியபின் யாழ். குடாநாட்டிலுள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களினுல் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற கள் வீண்விரயமாவது தடுக்கப்படுகிறது,

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினுல் சங்கானை, வரணி ஆகியஇடங்களில் ஏற்கனவே வடிசாலைகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (153)

## கடவுச்சீட்டு

# புதுப்பிக்க முடியாது மக்கள் ஏமாற்றம்!

(மானிப்பாய்)

கடவுச் சீட்டைப் புதுப்பிப்பவர்களும் இந்தியா மட்டும் செல்வதற்கான அவசரகால சாட்சிப் பத்திரத்தைப் பெறுபவர்களும் யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்திற்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்.செயலகத்திலுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் தற்போது புதிய கடவுச்சீட்டுக்கள் வழங்குவதற்குரிய விண்ணப்பங்கள் மாத்திரமே கையேற்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன

கடவுச்சீட்டு புதுப்பித்தல், கடவுச்சீட்டில் பிள்ளைகளைச் சேர்த்தல் அல்லது திருத்தம் செய்தல் அவசரகால சாட்சிப் பத்திரம்பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவை கையேற்கப்படுவதில்லை (71)

## ஹமீத் நாளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பது பற்றியும் ஆராயப்படலாமெனவும் தெரியவருகிறது.

மேலும் ஜனுப் ஹமீத் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. இச் சந்திப்பின்போது ஜனுதிபதி திரு. பிரேமதாசா, திரு. பிரபாகரனைச் சந்திக்க விரும்புவது தொடர்பாகவும் பேச்சுக்கள் நடாத்தப்படும்.

மாகாணசபையைக் கலைத்து புதிய தேர்தல்கள் நடாத்தப்படவேண்டுமென்றும், தற்போதுள்ள அரசியல் வெற்றிடத்தை நிரப்பக்கூடிய சில நடைமுறைகளை மேற்கொள்ளவும் விடுதலைப்புலிகள் வற்புறுத்துவார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசு ஈ.பி.ஆர்.எல்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எமது மண்உட்பட்டிருந்தகாலகட்டத்தில் ஈ. பி. ஆர் எல். எவ்வினர் புரிந்த கொலைகள், கொள்ளைகள் ஆள் கடத்தல் போன்ற மக்கள்விரோதச் செயல்களின் விளைவாக அவர்கள் மீது மக்கள் வைத்திருந்த வெறுப்பும் கோபமும் உலகமறிந்த விடயம்.

இந்தநிலையில் மக்கள் விரோத சக்திகளான ஈ. பி. ஆர். எல். எவ். உடன் சிறிலங்கா அரசு பேசிக் கொண்டிருப்பது எமது மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் எதிர்காலம் தொடர்பான ஓர் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப்படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த காலகட்டத்தில் இத்தீவின் அனைத்து மக்களுமே சிங்கள மக்கள்உட்பட ஒன்று திரண்டு இந்தியப்படை வெளியேற வேண்டுமென குரல் கொடுத்தார்கள் ஆனுல் இந்தியப்படை வெளியேறுவதைதடுப்பதற்கு ஈ. பி ஆர். எல். எவ்வினர் பல சூழ்ச்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அப்பாவிகளான முஸ்லீம் றிசேர்வ் பொலிஸாரை வெட்டிக்கொன்று அதன் மூலம் தமிழ்முஸ்லிம் கலவரங்களை உருவாக்க முயன்றதும், எல்லைப்புறங்களில் உள்ள சிங்கள மக்களையும் மற்றும் சிங்களபடையினரையும் கொன்று கலவரங்களை உருவாக்கி இந்தியப்படையை இங்கிருக்க ஈ.பி.ஆர். எல். எவ். எடுத்த முயற்சிகளை சிறிலங்கா அரசு நன்கு அறிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனுல் இன்று அவ்விதம் அந்நிய ஆக்கிரமிப்பு சக்திக்கு இத்தீவை அடகுவைக்க முயன்ற ஒரு கும்பலுடன் சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்களமக்களையும் அவமதிக்கும் செயலாக கருத வேண்டியுள்ளது. (து)

## படுகாயம்

[யாழ்ப்பாணம்]

நேற்றுயாழ்ப்பாணம்ஆனைப்பந்திச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார். சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளானது.

மேற்படி விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவரான நாயன்மார்கட்டைச் சேர்ந்த வெங்டாசலசர்மா (வயது 42) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் நினைவு இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## ஹமீத் லண்டனில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்த 19 அம்ச கோரிக்கைகள் சர்வகட்சி மாநாட்டில் ஆராய்வதற்காக சமர்ப்பிக்கப்படுமென அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்றுக்காலை 10மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்ற இருதரப்பு பேச்சுக்களின்போது ஈ. பி. ஆர். எல். எவ். சமர்ப்பித்த 19 அம்சக் கோரிக்கை குறித்து இவ்வாறு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களின்போது; வடக்கு-கிழக்கில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படல், மாகாண நிர்வாகத்தை எப்படிச் செயற்படுத்துவது, வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்தி ஜனநாயகத்தை மீண்டும் கொண்டு வருவது பற்றியே ஈ. பி. ஆர். எல். எவ். அக்கறை காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களில் ஈ. பி. ஆர், எல். எவ். சார்பில் திரு.சுரேஷ் பிறேமச்சந்திரன், தலைமையில் திரு. யோகசங்கரி, திரு. கிருபாகரன், ஜனுப் அபுயூசுப், திரு வீ. ஏ. கந்தசாமி ஆகியோரும் அரசு தரப்பில்அமைச்சர்ரஞ்சன்விஜேரத்னுவும் ஜனுதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனும் கலந்து கொண்டனர்.

இதேவேளையில் அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் விற்கும் இடையில் நேற்றுநடைபெற்ற பேச்சுக்கள் திருப்திகரமாயிருந்ததாக ஈ. பி. ஆர். எல். எவ். குழுவிற்கு தலைமை தாங்கிய திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்தகட்ட பேச்சுக்கள் எப்போது நடைபெறுமென தெரிவிக்கப்படவில்லை. திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### செல்வி தனலெட்சுமி குலசிங்கம்

(பழைய மாணவி, யாழ். கன்னியாஸ்திரியர் மடம்)

செல்வி தனலெட்சுமி குலசிங்கம் காலமாகிவிட்டார். அன்னுர் குலசிங்கம் - தேவராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், சத்தியராணியின் பெருமகளும், கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), விஜயலெட்சுமி, செல்வகுமார் (மாணவன், சென் பற்றிக்ஸ் கல்லூரி), உதயலெட்சுமி, குலராணி, ஜெயலெட்சுமி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். ஈமக்கிரியைகள் 16-05-90 (இன்று) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

கே. கே. எஸ். வீதி,
(மனோகரா தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம். (சி-3861)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.